விலை சதம் 50 ★ பக்கங்கள் — 10

உற்சாகத்தை அளிக்கவல்லது
அண்ணா கோப்பி
மின்சார ரோஸ்டரில்
உங்கள் முன்னிலையில் வறுத்து
அரைத்த
அண்ணா கோப்பியை
வேண்டிய அளவுகளில்
பெற்றுக்கொள்ளலாம்.
விஜயம்செய்யுங்கள்
அண்ணா கோப்பிக்கடை
இல. 4, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

# ஈழநாடு
## வாரமலர்
THE EELANADU VARAMALAR

நல்லூரில்
சகாய விற்பனை
நல்லூர்க் கந்தசாமி கோவில் முகப்பு வீதியில் அமைந்துள்ள மில்க்வைற் விளம்பர விற்பனைக் காட்சிச்சாலையில் மில்க்வைற் தயாரிப்புக்கள் யாவும் சகாய விற்பனையுடன் அன்பளிப்புகளும், மேலுறைகளுக்கான பரிசுகளும் வழங்கப்படும்.
மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

மலர் 21 ஆடி 20 நம்பூரன் 11 ஞாயிற்றுக்கிழமை (5—8—79) இதழ் 174

# உணவுமுத்திரை திட்டத்தினால் 75 லட்சம் மக்கள் பயனடைவர்

## புதிய திட்டம் செப். 1ல் அமுலுக்கு வருகிறது

(கொழும்பு)

**உணவு முத்திரைத் திட்டம் எதிர் வரும் செப்டம்பர் மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்குக் கொண்டுவரப்படும்.**

**300 ரூபாவுக்குக் குறைந்த மாதாந்த வருமானம் உள்ள சகல வசதி குறைந்தவர்களுக்கும் இந்த உணவு முத்திரைகள் வழங்கப்படும்.**

**இதுவரை கூப்பன் புத்தகம் மூலம் பங்கீட்டரிசியைப் பெற்றுவரும் 75 லட்சம் பேருக்கும் உணவு முத்திரைகள் வழங்கப்படும்.**

அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படும்போது உணவுமுத்திரையும் அதிகரிக்கப்படும்.

புதிய உணவுமுத்திரைத்திட்டத்தினால் 75 லட்சம் மக்கள் பயனடைவர். எவருக்கும் இத்திட்டத்தினால் பாதிப்பு ஏற்படாது, முன்பு இருந்ததைவிட அதிக பலனையே இவர்கள் அனுபவிப்பார்கள்.

மேற்கூறப்பட்ட தகவல்கள் நேற்றுக்காலை தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டன.

உணவுக் கட்டுப்பாட்டு ஆணையாளர் ஜனாப் டி. எம். ஹசன், ராஜாங்க அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ், செயலாளர் சரத் அமுனுகம, தகவல் பகுதி பணிப்பாளர் அனுரா குணசேகரா ஆகியவர்கள் இந்தப் பத்திரிகையாளர் மகாநாட்டில் கலந்துகொண்டனர்.

வசதிகுறைந்த மக்களுக்கு அரசினால் வழங்கப்படும் மானியங்கள் கிடைப்பதை உறுதிப்படுத்தும் முகமாகவே உணவு முத்திரைத்திட்டம் அமுலுக்கு கொண்டுவரப்படுகிறது.

வசதிபடைத்தவர்களுக்கு அரசின் மானியங்களினால் எதுவித நன்மையும் கிடைக்காமல் இருப்பதையும் இத்திட்டம் உறுதிப்படுத்தும்.

அரசினால் மானியமாக வழங்கப்பட்டுள்ள பொருட்களில் எவற்றையும் எவ்வளவு கொள்வனவுசெய்யவேண்டும் என்ற கட்டுப்பாடு இருக்காது

### சம்பள அதிகரிப்பு

இத்திட்டத்தை அமுல்செய்யும்போது நடுத்தர வருமானத்தைப் பெறுபவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதற்காக அரசு அவர்களுக்கு சம்பல அதிகரிப்பை வழங்கவும் தீர்மானித்துள்ளது

### செல்வந்தர்களுக்கு ,,

வசதிபடைத்த செல்வந்தர்களுக்கு எதுவித மானியத்தையும் வழங்குவதில்லை என்றும் அரசு தீர்மானித்துள்ளது

300 ரூபாவுக்குறைந்த வருமானம்உள்ளவர்களேஉணவு முத்திரைமானியத்தைப் பெற உரிமையுடையவர்களாவர்

### 6 பேருள்ள குடும்பம்

ஆறு பேருள்ள குடும்பத்தின் வருமானம் 350 ரூபாவாக இருப்பின் 6-வது நபர் உணவு முத்திரைக்கு விண்ணப்பிக்கலாம், இதே ரீதியில் அதிக

[10-ம் பக்கம் பார்க்க]

## தூத்துக்குடி துறையிலும் பெரும் தீவிபத்து!

### ரூ. 10 லட்சம் உரம் மூடைகள் சாம்பல்

தூத்துக்குடி, ஆக. 4
தூத்துக்குடி துறைமுகத்தில் உள்ள களஞ்சியமொன்றில் இன்று தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இத்தீவிபத்தினால் 10 லட்சம் ரூபா பெறுமதியான உரமூடைகள் எரிந்து சாம்பலாயின என்று தெரிவிக்கப்பட்டது தூத்துக்குடியில் கடந்தவாரத்துக்குள் இடம்பெற்ற இரண்டாவது பெரிய தீவிபத்து இது வாகும் என்று தெரிவிக்கப்பட்டது (இ)

## யாழ். மாவட்டத்தில் கம்யூனிஸ்ட் குழு நிலைமையை நேரில் அவதானிக்கிறது

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தின் இன்றைய நிலைமை நேரில் அறிந்து கொள்வதற்காக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் குழுவைச்சேர்ந்த விசேட கோஷ்டி ஒன்று யாழ்ப்பாணம் வந்துள்ளது.

திருவாளர்கள் எச் ஜி எஸ் இரத்தினவீரா, ஜெயதிலக டி சில்வா, டபிள்யூ ஏ தம்மதாசா, ஆகியோர் நேற்று முன்தினம் யாழ் வந்துள்ளனர்.

இக் குழுவினர் யாழ் மாவட்

(10-ம் பக்கம் பார்க்க)

## 4வது ஒலிபரப்புச் சேவை விரைவில் ஆரம்பிக்கப்படும்

### சகல ஊழியரும் புதிதாக நியமனம்

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் 4-வது சேவையொன்றையும் ஆரம்பிக்கவிருக்கின்றது. வர்த்தக ஒலிபரப்புக்காகமாத்திரம் நடத்தப்படவிருக்கும் இச்சேவையில் பணியாற்றுவதற்கு சகல ஊழியர்களும் புதிதாக நியமிக்கப்படுவார்கள்.

இத்தகவல் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது

யாழ்ப்பாணத்தில் விரைவில் நிகழ்ச்சிகள் பதிவுசெய்தல் ஆரம்பிக்கப்படும். பின்னர் ஒலிபரப்பும் ஆரம்பமாகும் அனுராதபுரத்திலிருப்பது போன்ற உப வானொலி நிலையமொன்று மாத்தளையிலும் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. (ம)

### மலிவு விற்பனை

போட் கோற்றினா கார் 9 SRI 272.
தொடர்புகொள்ளவேண்டியது
மு. புஷ்பராசா, இணுவில் மேற்கு, இணுவில்
3240

அனைத்துலக கிறிஸ்தவ சங்கம்:

## முத்துத்தம்பி அநாதை இல்லத்துக்கு ரூபா 35,000 உதவி

### லயன்ஸ் கழகத்தலைவர் தகவல்

(யாழ்ப்பாணம்)

"திருநெல்வேலி முத்துத்தம்பி அநாதை இல்லத்தின் விவசாய அபிவிருத்திக்காக, அனைத்துலக கிறிஸ்த சங்கம் முப்பத்தைந்தாயிரம் ரூபாவை வழங்கியுள்ளது. கிறிஸ்தவ சங்கமொன்று, இலங்கையிலுள்ள இந்த அநாதை இல்லத்துக்கு உதவுவது இதுவே முதல் தடவையாகும்.

திருநெல்வேலி முத்துத்தம்பி அநாதை இல்லத்தில், இளம் விவசாயிகள் கழகத்தை ஆரம்பிப்பதற்காக, யாழ் லயன்ஸ் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட விழாவிற்கு தலைமைதாங்கி உரையாற்றிய, டாக்டர் லயன். சபாரட்ணம் மேற்கண்டவாறு கூறினார்.

மங்களவிளக்கை, அநாதை இல்ல பொறுப்பாளர் சட்டத்தரணி எஸ். ஆர். கனகநாயகம் யாழ். மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிகாரி திரு எஸ் சிவமுத்துலிங்கமும் ஏற்றிவைத்தனர் விழாவில் கமத்தொழில் சேவை உத்தியோகஸ்தர்களும் லயன்ஸ் கழகப் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்

டாக்டர் சபாரட்ணம் தொடர்ந்து உரையாற்றுகையில் "திருநெல்வேலி அநாதை இல்லத்துக்கு 40 பரப்பு நன்செய் வயலுண்டு இக்காணியை வளப்படுத்தி நல்ல பயனைப் பெறுவதற்கு யாழ் லயன்ஸ் கழகம் தன்னாலான உதவிகளைச் செய்யும், எமக்குக் கிடைத்த உதவியைக் கொண்டு இக்காணியில் கிணறு ஒன்றும் அமைக்கப்பட்டுவருகிறது.

"இங்கு வாழும் சிறுவர்களுக்கு விவசாயத்துறையில் நல்ல பயிற்சி அளிப்பதற்காகவே, உலக கிறிஸ்தவ சங்கம் இவ்வுதவியை வழங்கியுள்ளது. மாணவர்கள் நல்லமுறையில் விவசாயத்தில் பயிற்சி பெற்றால், லயன்ஸ் கழகம் உங்களிடையே பரீட்சை ஒன்றை வைத்து டிப்ளோமா பட்டம் வழங்கவிருக்கிறது இதைவிட யாழ்பல்கலைக்கழகத்தில்

(10-ம் பக்கம் பார்க்க)

# அருள்மாரி பொழியும் தேவதாய்

[யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்னமடு என அழைக்கப்படும் சரவணையூர் திருச் செபமாலை மாத ஆலயத் திருநாள் இன்று.]

சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னர் கத்தோலிக்கத் திருமறையில்பலர்சேர்ந்திருந்தனர் ஆனால் அவர்கள் காலத்தில் மெய்ப்பணிகளாத ஆயினராய் வெளிப்பாரற்ற திருமறையில் தளர்வுற்றோராய் இருந்த காலத்தில் வண சந்திரசேகரர் என்னும் குரவர், இப்பகுதி மக்களின் உயர்ச்சி கருதி ஆங்கு 1894-ம் ஆண்டில் ஒரு பாடசாலையை ஆரம்பித்தார். அதன்பின்னர் அவர்களுக்கென்றே சிறிய கொட்டிற் கோவிலையும் அமைத்து வைத்தார். 1895-ம் ஆண்டில் ஆடி மாதம் 14-ம் தேதி அக்கோவிலில் முதன்முதலாக திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. 85 ஆண்டுகளுக்கு முன் இன்னமடு ஆலயத்தில் பிரதிஷ்டை பண்ணப்பட்டிருக்கும் திருச்செபமாலை அன்னையின் திருச்சொருபமானது ஊர்காவற்றுறை மேற்கில் உள்ள புனித ஜேம்ஸ் ஆலயத்திலிருந்தே இன்னமடுவுக்கு கொண்டுவந்து தாபிக்கப்பட்டது என்பது வரலாறு.

தற்சமயம் ஆலயம் அமைந்துள்ள இடத்துக்கு மேற்குப் பக்கமாகவே ஆதியில் கொட்டிற் கோவில் இருந்தது. தேவ அன்னை இப்பதியை சிறப்படையச்செய்ய வேண்டும் என்று திருவுளங்கொண்டமை பிறகு மாசிலாக அருள் பொழிந்து பக்தர்களைத் தம்பால் வசீகரித்து இழுக்கலானாள்.

பெரியமடு. தலைவில்லு போன்ற திருச்சேத்திரம்போல இதுவும் காலகதியில் பிரபலம் அடையத்தொடங்கிற்று. சனிக்கிழமைகளில் கால்நடையாகவே சனங்கள் கோஷ்டி கோஷ்டியாய் செபமாலை செபித்த வேளையாய் இன்னமடுவுக்கு வருவதாக முன்னுள்ள பெரியோர் கூறக்கேட்கலாம்.

1896-ம் ஆண்டிலிருந்து ஆவணி மாதம் 5-ம் நாளில் வருடாந்த உற்சவம் கொண்டாடப்பட்டுவந்தது இத்திருப்பதியில் இறைவனின் கிருபா கடாட்சம் மிகுதியாக இருப்பதை அறிந்த ஆயர் அதிவந்தனைக்குரிய யூலன் ஆண்டகை அவர்கள் 1909-ம் ஆண்டில் இதனை ஓர் யாத்திரைத் தலமாக அங்கீகரித்தார்' தீவுப் பற்று மக்கள் யாவரதும் அன்புக்கும் நம்பிக்கைக்கும் வழிபாட்டுக்கும் இன்னமடு மத்திய தானமாக விளங்கிவருகின்றது.

—எஸ். எம். ஜே.

## கேள்விப் பத்திரம்

குளிர் சாதனப் பெட்டி பெரியது (சிங்கர்) மண்ணெண்ணையில் இயங்கக்கூடியது விற்பனைக்குண்டு.

வேலை நாட்களில் புலோலி கிராமிய வைத்தியசாலைக்கு அண்மையிலுள்ள புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மருந்துச்சாலையில் காலை எட்டு மணி தொடக்கம் பி. ப. 5-00 மணிவரை நேரில் பார்வையிடலாம்.

15-8-79-க்குமுன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி.

பொதுமுகாமையாளர்

புலோலி ப. நோ.
கூ. சங்கம்,
புலோலி.
3189

## Vacancies in Glass Factory

கண்ணாடித் தொழிற்சாலையில் அனுபவமுள்ள பபுளர் (Bubblers) ஹெல்ப்பர் (Helpers) புளோவர் (Blowers) போன்றவர்களுக்கு சில வெற்றிடங்கள் இருக்கின்றன. அத்துடன் வேலைபழகுபவர்களும் (Trainees) எடுக்கப்படுவார்கள், உடன்நேரில் வரவும். தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ்
நீர்வேலி
3196

குஷிபா விநியோகஸ்தர்கள் வழங்கும்
ஜனதா தேயிலை
ஜூலை மாத பரிசுத் திட்டம்

| 1-ம் பரிசு | 2-ம் பரிசு | 3-ம் பரிசு |
| --- | --- | --- |
| D 1021 | B 3726 | B 2316 |

ஆறுதல் பரிசுகள்

A 3951, C 2044, A 8490, B 2149, B 1416
[3234]

## கட்டிடம் நிர்மாணிப்பதற்கான விலைக்கூறு

யாழ் மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் மின்தறி ஆலையில் பொயிலர் அறையும் (Boiler Room), காவலாளிக்கான கொட்டகையும் (Watcher Shed) அமைப்பதற்கு தகைமையுள்ள கட்டிட ஒப்பந்தக்காரரிடம் இருந்து விலைக்கூறுகள் கோரப்படுகின்றன. விபரங்களுக்கும், விண்ணப்பப் படிவங்களுக்கும்:-

யாழ். மாவட்ட புடவை நெசவாளர்
கூட்டுறவுச் சங்கம்,
10/1. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளவும். விண்ணப்பங்கள் யாவும் 17-8-79-ந் திகதி வெள்ளிக்கிழமை மாலை 2-00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

தலைவர்
3237

### பயிற்சி

வெளிநாடுகளில் தொழில்கள் பெறுவதற்கு நவீன முறையில் பயிற்சிகள் வெல்டிங் (Electric Arc & GAS) இலெக்ரிக் வயறிங் ரேடியோ (Transistor) Building Technology P M G Certificate முதலிய பயிற்சிகளுக்கு National Institutes, 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம்.
3173

மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்வோரும் ஏனையோரும் ஒரே மாதகாலத்தில், ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க, பல்கலைக்கழக பட்டதாரிகளினால் தயாரிக்கப்பட்டது. "Spoken English" (தமிழ் மூலம் ஆங்கிலம்) உரையாடல்கள். கடிதங்கள். கட்டுரைகள், பயிற்சிகள், வினாவிடைகள், பழமொழிகள் முதலியவற்றுடன் 50 மேற்பட்ட பயிற்சி விளக்கங்களையும் உள்ளடக்கியது நேரிலும் வி பி பி. யிலும் பெற்றுக்கொள்ளலாம். விலை; 12/50 மட்டுமே. தொடர்புகளுக்கு: Spoken English, 77, Centre Road, Mattakuliya, Colombo-15.
3153

### வகுப்புகள்

மத்திய கிழக்கு நாடுகளில் உத்தியோகம் பெறுவதற்கு நவீன உபகரண வசதியும், ஆய்வுகூட வசதியும் கொண்ட (Diploma in Radio & Television) செயன்முறைப்பயிற்சி வகுப்புகள் (6 மாதம்) ஆரம்பிக்கப்பட்டுள்ளன "வெல்டிங்" (Electric & Gas) பயிற்சி வகுப்புகளும் "மின் இணைப்புப்பயிற்சி" (Wiring) வகுப்புகளும் நடைபெறுகின்றன. விபரங்களுக்கு அதிபர், உயர் கல்லூரி, 73, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம் என்ற முகவரியோடு தொடர்பு கொள்க.
3262

## எண் சோதிடக் குறிப்பு

ஜெனன ஜாதக தசாபுத்தி எண் சோதிடக் குறிப்பு பொதுப்பலனுடன் எழுத பத்துரூபாய் முற்பணமாக அனுப்பிப்பதிந்து கொள்பவர்களுக்குப் பதிவுமுறைப்படி ஜாதகக் குறிப்பும் பலனும் எழுதி அனுப்பப்படும்.

கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் மேலதிகமாக இரண்டு ரூபாய் அனுப்புதல் வேண்டும்.

"வரசி"

சி. அ. செல்வத்துரை
கூளாவடி
ஆனைக்கோட்டை
3225

## அறிவித்தல்

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் (கொடிகாமம்) 5000 க்கு மேலான வெற்றுச் சாக்குகள், நல்லநிலையிலுள்ள 40 வெற்று பரல்கள் (45 கலன்) கேள்விப் பத்திர மூலம் விற்பனைக்கு இருக்கின்றது. ரூபா 150/- முற்பணம் கட்டி கேள்விப்பத்திரங்களைச் சங்க அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும். 18-8 79ந் திகதி சனிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். பொருட்களைச் சங்கத்தில் பார்வையிடலாம்.

பொதுமுகாமையாளர்

தென்மராட்சி கி. ப. நோ.
கூ. சங்கம்,
கொடிகாமம், 8; 8. 79;
3288

# வரி விளம்பரம்

### தேவை

கடைச் சிப்பந்திகள் தேவை, நல்லொழுக்கமுள்ளவர்கள், வேலையில் ஊக்கமுள்ளவர்கள், நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும், யாழ் நகருக்கு சமீபத்தில் வசிப்பவர்கள் விரும்பப்படுவர். என். சுப்பிரமணியம் கொம்பனி, 191[53] காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
3219

எமது நிறுவனத்தில் சேவையாற்றுவதற்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. விண்ணப்பதாரிகள் நேரில் தமது நற்சாட்சிப்பத்திரங்களுடன் வரவும் லக்ஷ்மி நாதன், தெல்லிப்பழை.
3222

வவுனியாவில் உள்ள பிரசித்த ஸ்தாபனத்திற்கு, அனுபவமுள்ள டிராக்டர் (TRACTOR) மெக்கானிக் தேவை 10-8-79 க்கு முன் எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். ராஜா டீசல் அன் எலெக்றிக்கல் இன்ஜினியேர்ஸ், இல. 1, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.
3208

அச்சுக்கோப்பவர், பிளேற்றின் மெசின் மைண்டர் பைண்டர் தேவை. தகைமையுடன் தபால் மூலம் விண்ணப்பிக்கவும். விண்ணப்பதாரர், 248/5 கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்
3229

### WANTED

Manager/ Store-keeper for our Branch at Kilinochchi. At least ten Years experience in Agro Chemicals. Salary Rs. 400/- per month plus half (1/2%) percent on retail sales turnover Security Rs 6000/- Apply Autos Ltd., Jaffna.
3239

### சேவை

புத்தகப் பிரியர்கள் கவனிக்க:- வாரா வாரம் இருதடவை புத்தகங்கள் எமது யாழ்ப்பாணத்து அங்கத்தவர்களின் வீட்டுக்கு விநியோகித்துத் திருப்பிப் பெறப்படும். எமது அங்கத்தவராகச் சேர தொடர்புகொள்க. ஒளவைக் கழகம், 70, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
3231

### கல்வி

3 மாதங்களில் மின்னியலாளன் (ELECTRICIAN) பயிற்சியளித்து டிப்புளோமா சான்றிதழ் வழங்கப்படும். இவர்களுக்கு பேசும் ஆங்கிலம் இலவசம் பாடசாலைப் பாடங்கள் பட்டதாரி ஆசிரியர்களால் நடாத்தப்படுகின்றன தொடர்பு கொள்ளவும் நிர்வாகி வீ; எஸ். நர்மதா ஆனந் இன்ஸ்ரிரியூட், மடம் வீதி, யாழ்ப்பாணம்
3230

### காணவில்லை

41/4 மானிப்பாய் ரோட் முத்துக்குமார் ஒழுங்கையில் வசிக்கும் நடராசா சிவனேஸ்வரி என்னும் பள்ளிமாணவியை கடந்த 2-8-79 தொடக்கம் காணவில்லை. உயரம் 4 அடி 5 அங். பொது நிறம் முடி கட்டையாக இருக்கும் கடைசியாக அவர் மஞ்சள் நிற பாவாடையும் வெள்ளை நிற சட்டையும் போட்டிருந்தார். கழுத்தில் 1 பவுண்மாலை சங்கிலி 1 மணிக்கூடு 1 சோடி காப்பு காதில் ஜிப்ஸி அணிந்துள்ளார். இவரை கண்டவர்கள் அண்மையில் உள்ள பொலிசுக்கோ அல்லது கீழ்க்காணும் விலாசத்திற்கோ அறிவிக்கவும். நடேசலிங்கம் நாதன் No 41/4 முத்துக்குமார்லேன் மானிப்பாய்வீதி யாழ்ப்பாணம்.
3233

### விற்பனைக்கு

Morris Marina Deluxe 1975 Model Car விற்பனைக்குண்டு. சிறந்த நிலையில் உள்ளது. கலனுக்கு 42 மைல்கள் வேலை செய்யும், தொடர்பு: 'மெடிகிளினிக்', சித்தன்கேணி.
3243

சூடப்பவுடர் மொத்தமாக விற்பனைக்கு உண்டு. ருத்தல் ரூபா 25/-. க. சச்சிதானந்தம், 13/1, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, கண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
3218

பலாலி வீதி இலுப்பையடிச் சந்திக்கு அண்மையில் காணி கட்டிடத்துடனும்; கட்டிடமில்லாமலும் விற்பனைக்குண்டு நல்ல தண்ணீர். பெரியகடை அரை மைல். க துரைரத்தினம், 195, குருசோ வீதி, கண்டிக்குளி.
3125

மாங்குளம் முல்லைத்தீவு பிரதான வீதியில் முள்ளியவளை கிராமசபைப் பகுதியில் மின் சாரசபை அருகில் 32 பரப்புக் குடியிருப்புக் காணி மா. பலா, தென்னை, கிணறு முதலிய வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: வி. சின்னத்துரை, தண்ணீரூற்று, முள்ளியவளை.
3179

பாவிக்கப்படாத கலர் ரெலிவிஷன் (14") மிஸிபிஸி மற்றும் பான் (நாஷனல் 14" விராண்டிங்) முதலியன விற்பனைக்கு உண்டு விபரங்களுக்கு: A. சுந்தரலிங்கம் கன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.
3235

நல்ல நிலையிலுள்ள AKAI—X 1800 SD விற்பனைக்குண்டு. Spool, Cardrage, Cassette போடக்கூடிய உபகரணமுண்டு. விபரங்கட்கு K[illegible] பாலேந்தன் 40/[illegible] [illegible] வீதி, யாழ்ப்பாணம். [illegible]

### கல்வி

German Language ஆரம்ப வகுப்புகள் 6-8-79ல் ஆரம்பமாகின்றன; விபரங்கட்கு: சபாநாயகம், "றூடி கொட்" 83, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
3226

ஆங்கிலம் பேச முடியவில்லையே என்ற கவலையா? கவலை வேண்டாம். ஆங்கிலம் என்றால் என்ன என்று தெரியாதவர்கள்கூட மிக இலகுவாக முப்பதே நாட்களில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க London-Diploma, பட்டதாரிகளின் ஆக்கத்தில் உருவானது. (English in Thirty Days) "முப்பது நாட்களில் ஆங்கிலம்" (தமிழ் மூலம் ஆங்கிலம்) உரையாடல்கள், கடிதங்கள், கட்டுரைகள், பயிற்சிகள், வினாவிடைகள், பழமொழிகள், வெற்றிப் பொன்மொழிகள், சுருக்கெழுத்துப் பதங்கள் உட்பட 100க்கு மேற்பட்ட பயிற்சி விளக்கங்களையும் உள்ளடக்கியது. பகுதி 1, 2 என வெளிவந்துள்ளன. இது இரண்டும் 20/- மட்டுமே. வி. பி பி யிலும், நேரிலும் பெறலாம். தொடர்புகளுக்கு: English Teacher, 103, Church Road, Mattakuliya, Colombo-15.
3152

## ராஜ்நாராயண் சென்னை வருகிறார்

சென்னை, ஆக. 4

ஜனதா-எஸ் கட்சித் தலைவர் திரு. ராஜ்நாராயண் இம்மாதம் 13-ம் திகதி சென்னை வருகிறார்.

மாறுநாள் புதுடில்லி திரும்புமுன் 13-ம் திகதி பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுவார்

# பெண்ணே உன் பெயர் புதிர்தானா?

'அமர காதல்' என் கையிலே கனத்துக்கொண்டிருந்தது. கோட்டை ரயில் நிலையத்தில் நின்றபடியே அதை விரித்துப்பார்க்கிறேன். கனமான புத்தகம்தான். நான்கு பாகங்களையும் ஒன்றாகவே வெளியிட்டிருக்கிறார்கள். ஒவ்வொன்றும் அறுநூறு பக்கங்களுக்கு மேலிருக்கும். தனித்தனியாகப் பிரித்துவைத்துப் பார்த்தால் ஒட்டிப்பிறந்தவர்களை பிரித்துவைத்துப் பார்ப்பது போன்ற வேதனை. அதனால் நான்கு பாகங்களையும் ஒன்றாகவே ஏந்திவைத்து அழகு பார்த்துக்கொண்டிருக்கிறேன். பெற்றவளுக்குப் பிள்ளையைப் பார்க்கும் நிறைவு. நாலாண்டு காலம் எனது கடுமையான உழைப்பு, உள்ளத்திலே புயலாக எழுந்த ஏதோ ஒரு ஆவேசம். அது மலர்வித்த பிரசவம்தான் கண்முன் நனவாக விரிந்திருக்கும் 'அமர காதல்' அதன் நாயகி வேறு யாருமல்ல வரதா தான்.

'வரதா' நான் பெருமூச்சு விடுகிறேன்;

யாழ்ப்பாணம் செல்லும் மெயில் வண்டியும் பெருமூச்சுடன் வந்து நிற்கிறது.

முண்டியடித்துக்கொண்டு ஏறும் சனக் கூட்டத்துடன் மோத எனக்கும் பிரியமில்லை; அவள் நெஞ்சிலேயே இடம் கிடைக்கவில்லையாம். இந்த ரயிலில் இடம் கிடைத்துத்தான் என்ன? போட்டி முனைப்புகள் அடங்கியபின் மெல்ல ஏறுகிறேன். எதிர்பார்த்தபடியேஇடமும்இல்லை.

இடது கரத்திலே அமர காதலை ஏந்தியபடி வலது கரத்தால் பற்றுக்கோலொன்றைப் பிடிக்கிறேன். தலை கவிழ்கிறது. கண்ணிலே பூத்திருந்த பூக்கள் புத்தகத்தின் அட்டைப்படத்திலே விழுந்து சிதறுகின்றன. அட்டைப் படத்திலே இருக்கும் வரதா சிரிக்கிறாள்.

"என் கண்ணீரைப் பார்த்தா சிரிக்கிறாள்?"

வரதா...

என் சூடான பெருமூச்சிலே கண்ணீர்த்துளிகள் காய்கின்றன. மங்கிய ஒளியிலே அவள் முகத்தைப் பார்க்கிறேன். அழகழகான கலரிலே அவள் முகம் ஜொலிக்கிறது. வண்ணப் பூச்சு இல்லாவிட்டாலும் வரதா அழகானவள் தான்.

பார்வையைத்தடுக்கும் மெல்லிய இருளை வென்றுவிட கூர்மையாகப் பார்க்கிறேன். அப்படிப் பார்க்கும்போது அந்தச் சிரிப்பினுள்ளே புதைந்து கிடக்கும் சோகம் மெல்ல மிதக்கிறது.

இப்போது என் இதயத்திலே தென்றல் வீசுகிறது... அதுதானே...என் கண்ணீரைக் கண்டு வரதா சிரிப்பாளா? அவ்வளவுக்கு இதயம் இல்லாதவளா அவள். இந்த நினைப்பு இனிக்கிறது.



ரயில் விரைந்து ஓடிக்கொண்டிருக்கிறது கால ஓட்டத்தைப்போல. காலம் முன்னேக்கித்தான் ஓடும். நினைவுகள்? என் இதயச் சுரங்கத்திலே புதைந்துகிடக்கும் நினைவுகள்?

வரதா!

அவள் அழகானவள்; எழுத்தாளன் நான். கற்பனையோடு நல்ல ஒட்டுறவு. எனக்கு வரப்போகும் மனைவி அப்படியிருக்கவேண்டும். இப்படியிருக்கவேண்டும் என்றெல்லாம் அழகாக கற்பனை செய்திருக்கிறேன். அத்தனையும் பொருந்தியவள் வரதா;

அப்படியொரு அழகு; தம் கசிக்கில்லை.

உள்ளம்?

வெள்ளை;

இந்த உண்மைகளுக்கு மாறான கருத்தை இப்படியொரு உச்சவேதனையில் உள்ளம் ஆழ்ந்திருக்கும்போதும் என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

வரதாவுக்குப் புத்தகங்கள் என்றால் உயிர். நேரம் போவது தெரியாமல் கதைகளை வாசித்துக்கொண்டிருப்பாள். சத்திய ஆவேசத்துடன் சமூக அநீதிகளைக் கண்டித்துப் புரட்சிக் குரலாக நானும் ஏதோ கதையென்று எழுதத்தொடங்கியிருந்த காலம். என்னிடமிருந்த கதைப்புத்தகங்களை வரதாவுக்குக் கொடுத்து அவளை ஆனந்தப்படுத்துவது என் மனம் விரும்பும் நடைமுறை. சாண்டில்யனின் கதைகள் மீது அவளுக்கு உயிர், தேடித்தேடி எடுத்துக்கொடுப்பேன், அந்தப் பெரிய புத்தகத்துள்...பல பாகங்களாக இருக்கும், புத்தகத்துள் இடையே எனது சிறுகதைப் பிரதியும் ஒளிந்திருக்கும். அவள் அதையும் படிக்கவேண்டும். ஒரு வார்த்தை. ஒரே வார்த்தை என்னைப் பாராட்டவேண்டும்.

இந்தச் சிறிய எழுத்தாளனின் பெரிய ஆசை.

'சுலதீபம்' நாவலைக்கொடுக்கிறேன். அதற்குள் எனது 'புரட்சி மலர்' சிறுகதை.

'புத்தகத்துக்குள்ள எதையோ தவறி வைத்துவிட்டீங்களே-' கிளிக்குரலின் கீதம். அவள் எடுத்துத் தருகிறாள்.

சிரிக்கிறேன். அசடு வழிகிறது.

'அது வந்து...அதுவும் கதைதான்.'

'கதையா?'

'ம்...ம்...' நான் எழுதினது'

'அது ஏன் எனக்கு' அவளுடைய புறக்கணிப்பு என் உற்சாக நதிக்கு அணைபோட்டது.

'நீ படிச்சுப்பார்க்கவேணும்'

'எப்படி.... பார்த்துத்தானே படிக்கவேணும்.'-அவள் சிரிக்கிறாள். அந்தச் சிரிப்பிலே வேதனை கரைகிறது.

பிறகும்... பிறகும் நான் எழுதினேன். அவள் படித்தாள், எனக்காகப் படித்தாள். கதைக்காகப் படிக்காமல் எனக்காகப் படிப்பது உள்ளூர மனக்குறைதான். அந்தக் குறையை அவளது நிறைவு நிரப்பிவிடும் காலச் சுவடுகள் அவள் மனதில் பதியப்பதிய இப்போதெல்லாம் என் கதைகளைப் படிப்பதிலும் விவாதிப்பதிலும் அவளிடம் சிறிது ஆர்வம் பிறந்திருந்தது.

'வரதா...மக்களுக்காக மக்கள் பிரச்சினையிலிருந்து இலக்கியம் பிறக்கவேண்டும், எரியும் பிரச்சினையில்தான் இலக்கிய மலர் பூக்கிறது.'

'அவனவன் தன் பிரச்சினையையே தீர்க்கமுடியாமல் அல்லல்படுகிறான். உலகத்துப் பிரச்சினைகளை...'

## காவலூர் எஸ். ஜெகநாதன்

'அதுக்காக பள்ளியறையில் நடக்கிற கூத்துகள் மட்டும் தானா இலக்கியம், சமகாலத்துப் பிரச்சினைகளை இலக்கியமாக்குவதுதான் அவசியமானது'

என்ன சொல்லி என்ன... அவளுக்கு அந்தப் பெரிய காதல் புத்தகங்கள் மீதுதான் காதல்.

அன்று நான் வரதாவுடன் கதைத்துக் கொண்டிருந்தேன். இலக்கிய உரையாடல்தான். ஒரு இலக்கியவாதி தன் இரசிகையையே காதலிக்கும்போது அதிலுள்ள இன்பமே தனியானது.

'எரிகின்ற பிரச்சினைகளுக்கு எண்ணெய் வார்ப்பதுதான் உங்கட வேலை என்கிறீர்களே. இதிலும் வார்த்துவிடுங்கள்' என்றவள் அப்போது ஊரிலே புகைந்துகொண்டிருந்த தணலை ஊதி வெளிப்படுத்தினாள்,

துரைசிங்கம்.

'ஏதோ பிறந்துவிட்டதற்காக வாழ்கின்றோம் என்று ஊரிலே கொழுப்புப் பிடித்துத்திரியும் பிறவிகளில் ஒன்று. வரதாவீட்டுக்குப் பக்கத்து வீட்டில் வளர்ந்துகொண்டிருந்த கொடியான மாலாவுக்கு கொழுகொம்புபோல் நடித்து அவள் வாழ்வில் சுமை ஏற்றி நழுவிவிட்டான். மாலாவின் வாழ்வைக் கெடுத்த வஞ்சகன் துரைசிங்கத்தை கண்டித்துக் கதை எழுதவேண்டுமாக நான்.

என் மனதுள் ஓங்கி ஒலிக்கும் நீதியின் குரல் என் உயிரான வரதாவிடமும் ஓங்கி ஒலிக்கிறது, நான் கொடுத்து வைத்தவன் என்று மகிழ்ந்தேன்.


இரவு பகலாக என் சிந்தனை விரிந்தது. புதிய கோணம். புதுப்பார்வை. வரதா படித்துவிட்டு மனம் திறந்து பாராட்டவேண்டும். திறக்கும் அம்மனதுள்ளே நுழைந்து நான் நிரந்தர இடம் பிடிக்கவேண்டும். கதை பிறந்தது, 'அக்கினிப்பிரவேசம்.'

தவறுகளுக்கான தண்டனைகளிலிருந்து தப்பிவிட்டவன் மீண்டும் தவறுசெய்வான், அந்தத் தவறு விளைவிக்கும் கண்ணீரிலிருந்து கன்னியரைக் காப்பாற்ற ஒருத்தி துணிந்து முன்வருகிறாள். அவனைக் கைப்பிடிக்க...தன் தூய்மையை நிரூபிக்க சீதை அக்கினியில் பிரவேசித்தாள். இவளோ கன்னியரைக் காக்க செய்த பிரவேசமும் வாழ்க்கையெனும் அக்கினியில்தான்.

வரதா கதையை கிரகித்துப்படித்தாள். பலதடவைகள் படித்தாள். மனம்விட்டுப் பாராட்டினாள் என் சிருஷ்டி வெற்றிக்காக நெஞ்சம் மகிழ்ந்தது.

சில நாட்களில்...

என் எழுத்துக்கு சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது. அவள் இனித்து நினைத்துக் கொண்டிருக்க அந்தச் செய்தியைக் கேட்டுவிட்டு கொழும்பு புறப்பட்டேன் பரிசுச் சான்றிதழோடு திரும்பி வரவேண்டும். அவள் தந்த வெற்றியின் மகிழ்ச்சியை அவளோடு அனுபவிக்கவேண்டும் காதலின்கற்பனையிலே திட்டங்கள் மிகப் பெரியவைதான்.



பரிசோடு திரும்பிவந்த என்னை எதிர்கொண்ட ஊர்க்காற்றில் மிதந்துவந்தசெய்தி...

வரதா உண்மையா?

என்னால் நம்பமுடியவில்லை. இது என்ன புதிர்.

நீ கண்டித்துச் சிறிய துரைசிங்கத்துடன் உனக்குக் காதலாம் என்னால் நம்பவே முடியவில்லை. சில நாட்கள் விரைந்தன. வரதாவைக் காணவே துணிவில்லை. எப்படி அதை அவளிடம் கேட்பது? கேட்டு உண்மையே என்றால் எப்படித் தாங்குவது. ஊர்ச்செய்தி முட்டை குஞ்சாகப் பறந்தது.

துரைசிங்கமும் வரதாவும் கூடி ஓடிவிட்டார்கள்- புது வாழ்வுக்கு.

வாழ்த்துக்கூறப் போயிருந்தேன் வாழ்த்துக்கூறவந்த என் மனதில் ஏனோ ஒரு பக்குவம்.

'வரதா...'

'ம்...'

'வாழ்த்துக்கூற வந்த இடத்திலும் என்ர பிறவிக்குணத்தைக் காட்டுவதாக நினைப்பாய் என்னிடம் தயக்கம்.

'வானத்துக்கே பறந்தாலும் இது மாறுமா சொல்லுங்க?'

'தீயவன் என்று திட்டினாயே... துரைசிங்கம் அவனோடு வாழ்விலே இணைய ஏன் விரும்பினாய்.'

அவள் சிரித்தாள். எழுந்து உள்ளே சென்றவள் கொண்டு வந்து தந்தது...'அக்கினிப் பிரவேசம்' எனது கதை.

'இதுதான்' என்றாள்.

'இருந்தாலும்...'

'தவறென்கிறீர்களா, அப்படியென்றால் நீங்கள் எழுதுவதெல்லாம் வெறும் உபதேசம்தானா.'

'இல்லை இல்லை... நீ செய்தது சரி...சரியானது.'

நான் எழுகிறேன். எதிரே நிற்பது என் காதலி வரதா அல்ல. என் அக்கினிப் பிரவேசத்தின் கதாநாயகி. என் எழுத்து வென்றுவிட்டது, வென்றேவிட்டது.

கம்பீரத்துடன் புறப்படுகிறேன்.

வரதாவின் அழைப்பு தடம் போடுகிறது.

'ஏதுப்புத்தகம் இருந்தால்...'

'கொண்டுவந்துதருகிறேன்.'

சாண்டில்யனின் புத்தகமல்ல. அதைவிடப் பெரிதாக-அதைவிட மதுரமாக நான் படைக்கவேண்டும். அவளுக்காகப் படைக்கவேண்டும். நான்கு ஆண்டுகள் இரவு பகலாக உழைத்தேன். உழைப்பின் அறுவடை இதோஎன் கையிலே 'அமர காதல்' நான்கு பாகங்கள்.

பெருமூச்சுவிட்டு மெயில் வண்டி யாழ்ப்பாணம் ஸ்ரேசனில் நிற்கிறது நேராக வரதாவின் வீட்டுக்கு வருகிறேன். கையிலே இருந்த அட்டைப்படவரதாவைப் பார்த்துவிட்டுநிமிர்கிறேன் எதிரே...

கையிலே குழந்தையை ஏந்தி நிற்கும் வரதா.

வரதா அது...வாடி வதங்கி எழில் குலைந்து...

'வரதா.. நீயா இப்படி.'

'அக்கினிப்பிரவேசமல்லவா?' அவளது விரக்திச் சிரிப்பிலும் ஒரு பெருமிதம்-கம்பீரம்.

'வரதா உனக்காகவே...' என்றபடி அமர காதலின் நான்கு பாகங்களையும் நீட்டுகிறேன்.

வாங்கியவள் முகம்மலர்வாள் என்றால் ஏனிந்தக் கோபம், கண்ணிலே கனல்.

'நீங்களா இதை எழுதினீர்கள்?'

[9ம் பக்கம் பார்க்க]



பிரவுண்சன் அரறூட்
அரச உணவு மருந்துச் சட்டத்தின் கீழ் உத்தரவாதப் படுத்தப்பட்டது.

# சிந்துவெளி அகழ்வாராய்ச்சியில் இந்து சமயச் சான்றுகள்

வை. இராஜேஸ்வரன்

1922-ம் ஆண்டு பிரபல தொல்பொருள் ஆராய்ச்சி இயக்குநர் நாயகம் சேர் ஜோன் மார்சல் தலைமையிலான ஆராய்ச்சிக் குழு சிந்துவெளி அகழ்வாராய்ச்சியை மேற்கொண்டது. சேர் ஜோன் மார்சலின் அயராத முயற்சியினாலும், திரு. ஆர். டி. பனேசி முதலியோரின் ஒத்துழைப்புடனும் நடாத்தப்பட்ட இவ்வாராய்ச்சியின் பயன் இந்துசமயத்தின் பல மூலாதாரங்களைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட உருவச்சிலைகள், முத்திரைகள், இலச்சனைகள் போன்றவற்றிலிருந்து சிந்துவெளியில் காணப்பட்ட சமயம் இந்து சமயமே என ஊகிக்கப்படுகின்றது.

## சக்தி வணக்கம்

சிந்துவெளி அகழ்வாராய்ச்சியில் பல பெண் உருவங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இங்கு கண்டெடுக்கப்பட்ட பெண் உருவங்கள் சில அமைதியான முகத்தோற்றத்தைக் கொண்டனவாகவும், சில அச்சமூட்டும் தோற்றத்தை உடையதாகவும், சில உருவங்கள் குழந்தையை வைத்திருப்பது போலவும் காணப்படுகின்றன. எனவே அக்கால மக்கள் தமக்கு வேண்டிய எல்லா உணவுப் பொருட்களையும் உதவிவந்த தரையைப் பெண் தெய்வமாக வழிபட்டுவந்தனர் என அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. இன்றுகூடச் சிவனின் துணைவியாரான உமாதேவியார், பார்வதி, காளி, துர்க்கை எனப் பல உருவங்கள் வழிபடப்படுதலையும் காளி, துர்க்கை ஆகிய உருவங்கள் அச்சமூட்டுவனவாக இருத்தலையும் சிந்துவெளிப் பெண் தெய்வங்களோடு ஒப்புநோக்கும்பொழுது தரைப் பெண் வணக்கமும் நாளடைவில் சக்தி வணக்கமாக மாறியிருக்கலாம் என்பதனை விளங்கிக்கொள்ளலாம். இங்கு கருவுயிர்க்கும் நிலையில் தலைகீழாய் நிற்கும் பெண் ஒருத்தியின் வயிற்றிலிருந்து செடியொன்று முளைத்துவருவது போன்ற வடிவம் தாங்கிய முத்திரையொன்று கண்டு பிடிக்கப்பட்டது. இது அகிலாண்டநாயகியின் ஆரம்பத் தோற்றம் எனவும் சிலர் கருதுகின்றார்கள்.

## சிவ வணக்கம்

இங்கு இடக்காலைத் தூக்கி ஆடும் நடராசர் உருவம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது. தவிர யோகி ஒருவரின் வடிவம்கொண்ட முத்திரை ஒன்றும் இங்கு காணப்படுகின்றது. இவ்வுருவத்தின் வலப்புறம் யானையும், புலியும் இடப்புறம் எருதும், காண்டாமிருகமும் நிற்கின்றன. இருக்கையின் அடியில் இரண்டு மான்கள் காணப்படுகின்றன. யோகியின் தலையில் வளைந்த எருமைக் கொம்புகள் காணப்படுகின்றன. நடுவில் தடித்த மலர்க்கொத்தோ கொத்தோ நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. இது சிவனைக் குறிப்பதெனச் சேர் ஜோன் மார்சல் கருதுகின்றார். தலை மீதுள்ள கொம்புகளும் பூக்கொத்தும் பிற்காலத்தில் திரிசூலமாகமாறியிருத்தல் வேண்டுமென அறிஞர்கள் கருதுகின்றனர். ஒரு சாரார் இக்கொம்புகள் சாஞ்சி ஸ்தூபத்தின் வாயிலில் பொறிக்கப்பட்டுள்ள சூலத்தைப் போன்றுள்ளதெனவும் கருதுகின்றனர். யோகியை அடுத்து விலங்குகள் காணப்படுவது சிவனின் பசுபதியாம் பாங்கினை உணர்த்துவதாகக் கொள்வர். சிவன் பசுபதி. அதாவது ஆன்மாக்களின் (பிராணிகள்) தலைவன். மிருகங்கள் சூழ உள்ள நிலை இதனைக் காட்டுகின்றது எனக் கருதினர். இதிலிருந்து அக்காலத்தில் சிந்துவெளியில் சிவ வணக்கம் நிலவியதென ஊகித்துக்கொள்ளலாம்.

## லிங்க வணக்கம்

ஹரப்பாவில் சிறிதும் பெரிதுமாக அறுநூறுக்கு மேற்பட்ட லிங்கங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவை லிங்க வழிபாட்டின் மூல நிலையைக் காட்டுவனவாக அமைந்துள்ளன. சிறிய லிங்கங்களை மக்கள் தாயத்துக்களைப் போல கையிலோ அல்லது கழுத்திலோ அணிந்திருத்தல் வேண்டுமென [illegible] கருதுகின்றனர்.

## கதிரவ வணக்கம்

முத்திரையொன்றில் ஆறு வெவ்வேறு தலைகளோடு கூடிய வடிவமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த ஆறு தலைகளில் மூன்று எருதின் தலைகளாகும். ஒன்று புலித் தலை. இரு தலைகள் சிதைந்து காணப்படுகின்றன. இந்த ஆறு தலைகளும் சூரியனின் கதிர்களை ஒத்திருக்குமாறு ஒட்டவைக்கப்பட்டுள்ளன. இன்னொரு தாயத்தில் ஒரு எருதுத் தலை ஆறு கதிர்களுடன் காணப்படுகின்றது. இவற்றில் இருந்து அக்காலத்தில் கதிரவ வணக்கமும் வழக்கத்தில் இருந்துள்ளது என்பதை அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

முத்திரையொன்றில் ஒரு மரத்தின் கீழ் உள்ள மூர்த்தியின் முன்னிலையிலே அடியார்கள் பலர் நின்று வழிபடும் காட்சியும், அவரது தலைமேல் நாகங்கள் படமெடுத்த காட்சியும் காணக்கூடியதாக இருக்கின்றது. இதைச் சிலர் தெட்சணாமூர்த்தியின் வடிவம் எனவும் கருதுகின்றனர்.

## நந்தி வணக்கம்

யோகிக்கு முன்பு பெருத்த திமிலோடு கூடிய எருது காணப்படுகின்றது. இது நந்திதேவரைக் குறிப்பதாகலாம். தவிர முத்திரையொன்றில் கோவில்போல உள்ள ஒன்றின் முன் நந்தி நிற்பதுபோல பொறிக்கப்பட்டுள்ளது. சிந்துவெளி மக்களின் வர்த்தகத்திற்கு எருது பேருதவிபுரிந்து வந்தது ஆதலால் இது காலகதியில் வணக்கத்திற்குரியதாக மாறியிருக்கலாமென அறிஞர்கள் கருதுகின்றனர். தவிர இங்கு ஒற்றைக் கொம்புடைய எருதுகளும் காணப்படுகின்றன. இவை வணக்கத்தின் பொருட்டுக் கற்பிக்கப்பட்டவை என்றும் அவற்றின் வரலாறு சிறப்புடையதாக இருக்கலாமெனவும் கருதப்படுகின்றது. நந்தி வணக்கம் முதலில் தனியாக இருந்து பின்னர் சிவ வணக்கத்துடன் இணைக்கப்பட்டிருக்கலாமென ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட களிமண் தாயத்து ஒன்றில் பாற்கிண்ணம் முன் நாகபாம்பு உருவம் ஒன்று காணப்படுகின்றது. இதில் இருந்து இங்கு நாக வணக்கம் நிலவியிருக்கலாமென அறியக் கிடக்கின்றது. தவிர இங்கு கண்டுபிடிக்கப்பட்ட முத்திரைகளிலிருந்து புறு வணக்கம், கருட வணக்கம், மர வணக்கம், மர தேவதைகள் வணக்கம் ஆகியன நிலவியதாக அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

தவிர, இங்குள்ள மக்கள் எருது, எருமை, யானை, வேங்கை, கரடி, மான், காண்டாமிருகம், முதலை, வெள்ளாடு முதலிய விலங்குகளையும் தெய்வங்களுக்குப் பிரதிநிதிகளாகவோ அடையாளமாகவோ எண்ணி வழிபட்டுவந்தனர். இங்கு வாயில் சிறு மீன்களை வைத்துள்ள முதலை, ஆமை போன்ற உருவங்களை ஆறுகளுடன் சேர்த்துப் பொறிக்கப்பட்டுள்ள முத்திரைகள் கிடைத்துள்ளன. இவற்றிலிருந்து அக்கால மக்கள் ஆற்று வணக்கம் செய்து வந்தனர் என்பதைத் தெரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

இன்று இந்துசமயத்தில் காணப்படும் பல் வழிபாட்டு முறைகள், பழக்கவழக்கங்கள் முதலியன அக்காலத்திலும் வழக்கில் இருந்ததாக அங்கு அகழ்வாராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட பல முத்திரைகள் சான்று பகர்கின்றன. சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட பல ஏதுக்களைக் கொண்டு மக்கள் பலியிடும் வணக்கம், தாயத்து அணிதல், சமயப் பதக்கங்களை அணிதல் போன்ற பழக்கவழக்கங்களைக் கையாண்டனர் எனத் தெரிகின்றது.

தவிர, சிந்துவெளி மக்கள் இன்று எமது ஆலயங்களில் நடைபெறுவதுபோல, கடவுள் உருவங்களை ஊர்வலமாக எடுத்துச் சென்றார்களென்றும் நேர்த்திக்கடன் பொருட்டு கோவில்களில் பதுமைகளை வைத்தார்களென்றும் அறியக் கிடக்கின்றது.

ஹரப்பாவில் கிடைத்த தாயத்து ஒன்றில் புலி முன் ஒருவர் மத்தளம் அடிப்பது போலப் பொறிக்கப்பட்டுள்ளது. வேறொரு முத்திரையில் எருதின் முன்பு மங்கையொருத்தி நடனமாடுதல் குறிக்கப்பட்டுள்ளது. இதில் இருந்து அக்காலத்தில் இசையும் நடனமும் வழக்கில் இருந்தன என்பதை அறிந்துகொள்ளலாம்.

இங்கு கண்டெடுக்கப்பட்ட ஒரு முத்திரை பெண்கள் பலர் படைக்கும் தட்டுக்களை ஏந்தி நிற்கும் வடிவத்தைச் சித்தரிக்கின்றது. இங்கு கண்டெடுக்கப்பட்ட சில பெண் வடிவங்களிலேயே புகை ஏறியிருத்தலையும் காணக்கூடியதாக இருக்கின்றது. இதில் இருந்து அக்காலத்தில் தூப, தீப, நைவேத்தியமுறை வழக்கில் இருந்தவந்ததென்பதையும் விளங்கிக்கொள்ளலாம்.

இந்துசமயத்திலே கிரிகைகள், வழிபாடுகள் நிகழ்த்துவதற்கு முன்பு குளித்து, உடலைத் தூய்மைசெய்துகொள்வது அவசியம். குளிப்பதற்குச் சிந்துவெளி மக்கள் கிணறுகளையும் குளங்களையும் பாவித்தனர். இதற்குச் சான்றாக மொகஞ்சதரோவில் 40 அடி நீளமும் 23 அடி அகலமும் 8 அடி ஆழமும் உடைய

[9-ம் பக்கம் பார்க்க]

# எண் சோதிடத்தில் உங்கள் வார பலன்

[5-8-1979 முதல் 11-8-1979 வரை முழுவாரபலன்]

இப்பலன்கள் பிறந்த தேதி எண்ணைக் (அதிர்ஷ்ட எண்) கொண்டே பார்க்கவேண்டியது. ஆண்டு, மாதம், திகதி மூன்றையும் கூட்டிய கூட்டெண்ணும் (விதிஎண்) பொருந்த, பெயர்எண் பற்றுமெண்களும் சரிவர அமையுமானால் இப்பலன்கள் கூடுதலாகவே நடக்கும்.

இந்த வாரத்துக்குரிய பூர்வ ஜென்மத் தொடர்பு எண்-9, விதி எண்-3, அதிர்ஷ்ட எண்-5, ஊழ் எண்-8, வினை எண்-8, நியதி எண்-1, நியம எண்-1, வாழ்வெண்-2, ஆரோக்கிய எண்-9, ஆயுள் எண்-1, ஆக அமைகின்றது.

இந்த வாரம் உலக அரங்கில் இராணுவ நடவடிக்கைகள் அமைதியை நிலைநாட்டுதல் நிமித்தம் முக்கியத்துவம் பெறும். சமரசப் பேச்சுவார்த்தைகள் கூடுதலாக அமையும். பொதுஜன அமைதி நிலவும் பரோபகார முயற்சிகள் கூடுதலாக இருக்கும். புதன், வெள்ளிக்கிழமைகளில் சிறு சிறு பதட்ட நிலைகள் உருவாகலாம். புதன், வெள்ளி நற்சுப கருமங்களுக்கு உகந்த நாட்களல்ல. ஞாயிற்றுக்கிழமையும், வியாழக்கிழமையும் அமைதி நிறைந்த நாட்களாகும். இந்நாட்களில் நற்கருமங்கள் செய்தல் உத்தமம்.

### எண்: 1

இவர்களுக்கு இந்த வாரம் வெளிக்குப் பகட்டாய் இருப்பினும் காரியத்தில் கஷ்டமும் நஷ்டமும் கூடுதலாயிருக்கும். ஆரோக்கியம், கௌரவம், புகழ் நன்றாயிருந்தாலும் மனோநிலை அவ்வளவு திருப்தியாக இருக்கமாட்டாது. அமைதியாக இருந்த மனம் தீயசக்திகளால் தூண்டப்பட்டுச் சஞ்சலமுற நேரிடும். தொழிற்றானத்திலும் பிரச்சினைகள் ஏற்படலாம். சிலருக்குக் குழந்தைகளின் நிமித்தம் கவலை ஏற்படலாம், வீண் சண்டை சச்சரவுகளும் ஏற்படலாம். நண்பர்களுடன் நிதானமாகப் பழகிக்கொள்ளவும்.

### எண்: 2

இவர்களுக்கு இந்த வாரம் முன்னேற்றமானதாகவேயிருக்கும். குடும்ப வாழ்க்கை சுமுகமாயிருக்கும். சுப காரியங்களின் நிமித்தம் சிறு பிரயாணங்களும் ஏற்படலாம். போதிய பணவசதி ஏற்படும், அவசியமான செலவுகளும் ஏற்படலாம். தொழில் ஸ்தானங்களில் அதிக பிரயாசை ஏற்படமாட்டாது. வாரம் பிற்பகுதியில் செய்யும்தொழில் [illegible] சிரமங்கள் ஏற்படலாம். திடீர் மாற்றங்களும் சிலருக்கு ஏற்படலாம். வாரம்பிற்பகுதி உடல் நலக்குறைவும், சிலருக்கு மோசடி வேலைகளால் வீழ்ச்சியும் ஏற்படலாம். புதன்கிழமை அவதானமாக நடந்துகொள்ளவும்.

### எண்: 3

இவர்களுக்கு இந்த வாரம் மிகக் கம்பீரமான வாழ்க்கை அமையும். வாழ்க்கையில் கஷ்டம் நீங்கி முன்னேற்றம் ஏற்படும். அதிகாரப்பேச்சு கூடுதலாக இருக்கும். அரசாங்க ஆதரவும் ஏற்படும். பிரிந்தவர்கள் வந்து கூடுவார்கள். எதிர்ப்புக்களை எதிர்த்து முன்னேறுவீர்கள். கடன்தொல்லை நீங்கி மன அமைதி ஏற்படும், அரசியல்வாதிகளுக்குப் பெரும் வாய்ப்புண்டு. பலருடைய ஆதரவில் பெருமையடையலாம். பிள்ளை ஒன்றின் முன்னேற்றத்தால் மகிழ்ச்சியடைவீர்கள். ஒரு திட்டத்துக்குக் கட்டுப்பட்டுச் செயல்படுவீர்கள்.

### எண்: 4

இவர்களுக்கு இந்த வாரம் சாந்தமான ஓரளவு திருப்தியான நிலையைக் குறிக்கின்றது. இருந்த நிலையிலும் முன்னேற்றம் கூடுதலாகஇருக்கும். பணவசதி அவ்வளவு திருப்தியாக இருக்கமாட்டாது ஆனால் கடன் கட்டுக்கடங்கியிருக்கும். முற்பகுதி சோதனை நிறைந்ததாயினும் பிற்பகுதி வெற்றியும் சந்தோஷமும் நிறைந்ததாக இருக்கும். பிறருக்கு உதவி செய்ய முற்பட்டால் வீண் குற்றம் கேட்க நேரிடும். ஆசிரியர்களாயிருப்பவர்களுக்கு இவ்வாரம் சிறப்பாக அமையும். சிலருக்குப் பிறநாட்டுப் பிரயாணங்கள் ஏற்படலாம். புதன்கிழமை அவதானம் வேண்டும்.

### எண் 5

இவர்களுக்கு இந்த வாரம் முயற்சிகள் சரியான முடிவடையாமல் மாறிக்கொண்டேயிருக்கும், கௌரவம், புகழ் நன்றாக இருந்தாலும் மனநிலை சிறிது கலவரமாகவேயிருக்கும். பெரியோர்களின் ஆதரவு கிடைக்கும். வியாபார முன்னேற்றமுண்டு பொன்னான சந்தர்ப்பம் ஒன்று உங்களைப் பூரிப்படையவும் செய்யலாம். வேண்டாத உறவுகளைத் துண்டித்துக்கொள்ளவும். இல்லையேல் அரசியல் பயம் ஏற்படவுங்கூடும். காளைப்பருவத்தினருக்குக் காதலின்பம் கைகூடலாம். தேடிய உறவு நாடியே வரும்.

### எண் 6

இவர்களுக்கு இந்த வாரம் தீய குணங்களே முன்தோன்றப்பார்க்கும், தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும், தொழில் துறையில் ஏற்ற இறக்கமாக முன்னேற்றமுண்டு. புதிய கடன் வாங்கிப் பழைய கடன்களை அடைக்க நேரிடும். தொழில் தானங்களில் மேலதி

(9-ம் பக்கம் பார்க்க)

நம்பிக்கையான நவநாகரிக தங்க, வைர நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்.


119, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.

போன்: 7199, தந்தி: வைரம்.

# குகசர்மா எழுதிய "ஞானத்தமிழ்"

## சமயம் கற்கும் மாணவர்களுக்கு துணைநூலாகக் கற்பிக்கலாம

—பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள்



'ஞானத்தமிழ்' என்னும் நூல் நாற்பத்திநான்கு கட்டுரைகளைக்கொண்ட ஒரு தொகுதி பிரம்மஸ்ரீ வ. குகசர்மா அவர்களால் எழுதி உருவாக்கப்பட்ட இக்கட்டுரைகள் 'ஈழநாடு' பத்திரிகையில் அவ்வப்போது வெளிவந்தவை

பௌராணிகவித்தகர் குகசர்மா அவர்கள் முதன்முதலாக கட்டுரைகள் மூலமே எனக்கு அறிமுகமாயினர். அறிமுகமாகாத நிலையிலேயே அவரது கட்டுரைகளைப் படிக்கும் சூழ்நிலை எனக்கு ஏற்பட்டது இலக்கிய இலக்கணங்களில் புலமை, சமய நூல்களில் தேர்ச்சி என்பன இவரது கட்டுரைகளின் அடிப்படைகளாக விளங்கியதைக் கவனித்து வரலானேன். மரபிலிருந்து வழுவாத பண்பை இவரது கட்டுரைகளில் எப்பொழுதும் காணலாம்.

நூலாசிரியருக்குப் புராணங்களில் பயிற்சி உண்டு என்பதை நேரடியாக அவருடன் பழக நேரிட்டபொழுது மிகவும் நன்ருக அறிய நேர்ந்தது. புராணங்களைப் படித்துப் பயன் சொல்லும் மரபு மறைந்துகொண்டே வரும் இன்றைய நிலையில், ஆறுமுக நாவலரவர்கள் வளர்த்த புராணபடன பாரம்பரியத்தை இன்று பேணிவருபவர்களுள் இவர் தலைசிறந்தவர்.

சமயக்கருத்துக்களைப்புராண அடிப்படையில் மட்டுமே எளிதாகப்பரப்பலாம். புராணங்களில் பெற்ற புலமையும் இலக்கண இலக்கியப் பயிற்சியையும் துணைகொண்டு சர்மா அவர்கள் சிறந்த கட்டுரைகளை அவ்வப்போது யாத்து 'ஈழநாட்டில்' வெளியிட்டு வந்தார்கள்.

கட்டுரை ஒவ்வொன்றும் ஒவ்வொரு கருத்தை நாடுவதாகக் கொண்டு அமைவது. கட்டுரைகளில் கருத்துக்கள் தெளிவாக எடுத்துரைக்கப் பெறுகின்றன. சைவத் திருமுறைகளில் மட்டுமன்றி திவ்வியப் பிரபந்தங்களிலும் பயிற்சி இருப்பதை கட்டுரைகள் ஆங்காங்கே உணரவைக்கின்றன. அவர்கள் ஆங்காங்கே தரும் உவமைகள் அவர் கட்டுரைகளை நயந்து படிக்கும்படி தூண்டுகின்றன.

சிறு அமைப்பைக்கொண்ட கட்டுரைகள் எளிய நடையில் அமைந்து தெளிவுடன் கருத்துக்களை சிந்திக்க குழப்பமெதுவும் விளைவிக்காத முறையில் எடுத்துக்கூறுவதினால் வாசிப்பவர்கள் மனதில் எவ்விதமான சலிப்பையும் உண்டாக்குவதில்லை. ஒரு கட்டுரையை வாசித்து முடித்ததும் வாசகர்கள் மறு கட்டுரையையும் வாசிக்கும்படி தூண்டப்படுகிருர்கள்.

சமயத்தைப் பாடமாகக் கொண்டு கற்கும் மாணவருக்கும் சமய அறிவை வளர்க்கப் பயன்படுவது இக்கட்டுரைத் தொகுதி சமயம் கற்பிக்கப்படும் பாடசாலைகளில் இக்கட்டுரைத் தொகுதியைத் துணைநூலாக வாசிக்கச்செய்து ஆசிரியர்கள் மாணவர் மாட்டுச் சமய அறிவை விரிவாக வளர்ப்பதற்குத் தகுந்த நூல்.

இதுபோன்ற பல நூல்களைச் சைவஉலகம் எதிர்பார்க்கின்றது. இத்தன்மையான சைவத் தொண்டினைச் செய்வதற்கு ஏற்ற ஆயுளையும், திடகாத்திரத்தையும் அருளும்படி இறைவனைப் பிரார்த்தித்து நூலாசிரியரை வாழ்த்துகின்றேன்.

## காஞ்சி பெரியவாள் பூரண ஆசி வழங்குவார்

—ச. அம்பிகைபாகன்

உலகத்தில் தோன்றிய மொழிகளுள் பக்திக்குகந்த மொழி தமிழ்மொழியென்பது பன்மொழிப் புலவர் கருத்து. இப்படி இவர்கள் கருதுவதற்குக் காரணம் தமிழில் "கல்லைப் பிசைந்து கனியாக்க" வல்ல பல்லாயிரக்கணக்கான பாடல்கள் காணப்படுவதே. இவற்றுள், சிவஸ்ரீ குகசர்மா அவர்கள் கூறுவதுபோல், சைவத் திருமுறைகள் பன்னிரண்டிற்கும், திவ்வியப் பிரபந்தம் நாலாயிரத்திற்கும் தனியிடமுண்டு. இவற்றிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட பாக்களை விளக்கி "ஞானத்தமிழ்' என்னும் தலைப்பின் கீழ் ஆசிரியர் பல கட்டுரைகளை எழுதி ஈழநாட்டில் வெளியிட்டுள்ளார். இவற்றில் நாற்பத்திநாலு கட்டுரைகளே இப்பொழுது நூல்வடிவில் வெளிவந்துள்ளன.

இந்நூலுக்கு ஆசிரியர் "ஞானத்தமிழ்' என்னும்பெயர் கொடுத்திருப்பது மிகவும் பொருத்தமானது. இந்நூலிற் காணப்படும் பாடல்கள் எல்லாம், இறையநுபூதி பெற்ற மகான்களாற் பாடப்பெற்றவை. தாம் பெற்ற இன்பத்தை மற்றையவர்களும் பெறவேண்டுமென்னும் பெருநோக்கோடுபாடப்பெற்றவை. இக்கருத்துக்களை ஆசிரியர் தமது முதற் கட்டுரையில் பின்வருமாறு கூறியுள்ளார்.

"தாம் வழிபடும் கடவுளிடத்தில் உண்டாகும் பேரன்பே அவரைப் பாடுதற்கு மூலகாரணமாகிறது; அடியார்கள் தாம் மாத்திரம் உய்யவேண்டுமென்ற குறுகிய நோக்கோடு தோத்திரங்களைப் பாடவில்லை. தமக்குப் பின்வருவோரும் பாடி உய்யவேண்டுமென்ற பெருநோக்கோடு பாடினர்கள்."

இந்நூலில் பல சிறப்புக்கள் காணப்படுகின்றன. அவற்றையெல்லாம் எடுத்துக்காட்ட இடம் போதாமையால் ஒரு சிலவற்றை மாத்திரம் காட்ட விரும்புகிறேன். தாம் எடுத்துக்கொண்ட பொருளை விளக்குவதற்குப் பல நூல்களிலிருந்து பொருத்தமான மேற்கோள்களை எடுத்துக்காட்டுவது ஒரு சிறப்பாகும். இச்சிறப்பை இந்நூலிற் காணப்படும் முதற் கட்டுரையிலே காணலாம். மனதில் ஒளிவிளக்கு ஏற்றுவதைப் பற்றி பூதத்தாழ்வார் பாடியிருப்பதை விளக்கவந்த ஆசிரியர் இது சம்பந்தமாக பரஞ்சோதி முனிவர், திருமூலர், திருவள்ளுவர், சுந்தரர், சம்பந்தர் முதலியோர் கூறியவற்றை எடுத்தாண்டிருப்பது கவனிக்கத்தக்கது. ஒரு சிறந்த சங்கீத மேதைக்கு எப்படிக் கற்பனாஸ்வரங்கள் வந்து அநுயாசமாக அமைகின்றனவோ அப்படியே இவருக்கும் மேற்கோள்கள் வந்து அமைகின்றன இப்படி மேற்கோள்களை எடுத்தாண்டு இருப்பதால் பல அநுபூதி மகான்களை அறியும் வாய்ப்பை வாசகர்களுக்குக் கொடுத்துள்ளார்.

இன்னுமொரு சிறப்பு இந்நூல் மூலம் சைவத்திற்கும் வைஷ்ணவத்திற்கும் நல்லுறவை ஏற்படுத்தியிருப்பது. பண்டைக்காலத்தில் சைவத்திற்கும் வைஷ்ணவத்திற்கும் முரண்பாடு கிடையாது, நம்மாழ்வார் சிவனையும், விஷ்ணுவையும், பிரமனையும் சமரச நோக்கோடு பின்வருமாறு பாடியுள்ளார்.

[6-ம் பக்கம் பார்க்க]

## "44 அகல் விளக்குகள்"

—பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

பௌராணிக வித்தகர் பிரம்மஸ்ரீ வ. குகசர்மா அவர்கள் புராணங்களிலேயன்றித் திருமுறைகளிலும் திருவாய்மொழியிலும் திளைத்தவர். சமய சாத்திரங்களிலும் அறிவு நூல்களிலும் ஆராமைமிக்கவர்.

அறிவு தூயதாய் வளர்ந்து, அன்பு பெருகி, தெய்வபக்தி இடைக்கப்பெறுவது சர்மா அவர்களின் குறிக்கோள்

'அகத்துக் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்' என்பது திருமந்திரம். அகத்தூய்மைப்பட்டவழி உதிக்கும் அறிவாகிய ஞானத்தில் கிடைப்பது அந்த ஆனந்தம். அகம்-மனம்.

'மனத்துக்கண் மாசிலனாதல், எப்பொருளெத்தன்மைத் தாயினும் யார்யார் வாய்க்கேட்பினும் மெய்ப்பொருள் தக்ககூடும்' என்பது வள்ளுவத்தேவர் காட்டும் வழி

இந்நூல் மனத்தூய்மையிற் தொடங்கி இறைவனுடன் கூடும் பேரின்பத்தைவிழையும் கூடல் இழைத்தலில் முற்றுப் பெறுகிறது.

கட்டுரைகள் சின்னஞ்சிறியவை! அளவானவை; தொன்மையை, மென்மைசெய்து நடப்பவை; சிறுவர் அறிவிற் பெரியர் யாவரையும் சிந்திக்கவைப்பவை, கட்டுரையில் மிளிரும் பாடல்கள் மனனத்திற்குரியவை.

ஈழநாட்டில் வெளிவந்த இக் கட்டுரைகள் புத்தக உருவில் வருவது வரவேற்கப்பாலது.

இந்நூல் நல்லதொரு ஞான விளக்கு. 44 அகல்களைக் கொண்ட விளக்கு; அகல்கள் தோறும் எழுஞ் சுடர்கள் அறியாமை இருளைப்போக்கி, அறிவைப் பிரகாசிக்கச்செய்து, பெறக்கூடிய பயன்கள் யாவற்றையும் பயப்பதாக என்று, திருவருளைப் பிரார்த்திப்போமாக.

(சமய அறிஞர் வ. குகசர்மா அவர்கள் 'ஈழநாடு' பத்திரிகையில் எழுதிவந்த 'ஞானத்தமிழ்' தொடர் கட்டுரை நூல் வடிவில் இன்று தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய முன்றலில் வெளியிடப்படுகின்றது. இதையொட்டி இச்சிறப்பு மலர் வெளியிடப்படுகின்றது....(ஆ,ர்.)

## தமிழ் மக்களின் பாராட்டுக்குரியவர்

— பேராசிரியர் சு. வித்தியானந்தன்

பௌராணிக வித்தகர் பிரம்மஸ்ரீ வ. குகசர்மா அவர்கள் ஈழநாடு பத்திரிகையிலே தான் எழுதி வெளிவந்த 44 கட்டுரைகளைத்தொகுத்து 'ஞானத்தமிழ்' என்னும் பெயருடன் நூலாக வெளியிடுகின்ருர். சைவநாயன்மார்கள், வைணவ ஆழ்வார்கள், சமண முனிவர்கள் ஆகியோர் ஞான உயர்வுக்கு வழிகாட்டியாகப்பாடிய பாடல்களிலே தான் சுவைத்தவற்றை எடுத்துக்காட்டி இக்கட்டுரைகளில் விளக்குகின்ற காரணத்தினுலே இந் நூலுக்கு 'ஞானத்தமிழ்' என்னும் தலைப்புப் பொருத்தமாக அமைந்துள்ளது.

ஒவ்வொரு கட்டுரைத் தலைப்பும் ஒவ்வொரு பக்திப் பாடலின் அடியாக அல்லது தொடராக அமைகின்றது. அப்பாடலடி அல்லது சொற்ருெடர் இடம்பெறும் பாடல் முழுமையாகக் கட்டுரையின் இறுதியிலே தரப்படுகின்றது. இது இந்நூலிலே காணப்படும் ஒரு முக்கியமான ஒழுங்கமைப்பாகும்.

தமிழ் மொழியிலே உள்ள பக்திப் பாடல்கள் யாவற்றையும் எல்லோரும் படித்தறிவதென்பது இயலாத விடயமாகும். எனினும், அப்பாடல்களிலே கருத்துச் செறிவும் இலக்கிய நயமும், ஆன்மீகப் பண்பும் செறிந்து விளங்குஞ் சில பாடல்களையாவது கற்றறிவது பயனுடைத்தாகும். அத்தகைய பயனைப் பயக்கும் வண்ணமாக அமைகின்றது ஞானத் தமிழ் என்னும் இந்நூல். ஒவ்வொரு கட்டுரையிலும் ஒரு சிறந்த பாடலின் கருத்துச் செறிவும் இலக்கிய நயமும் எடுத்துக் காட்டப்படுகின்றன. 'மூண்டகனெஞ்சிற் வைதும் முருகனே...' என்னும் செய்யுளை அடிப்படையாகக் கொண்டு உள்ளக் கமலம்' என்னும் கட்டுரை அமைகின்றது. கட்டுரையைத் தொடங்கும் ஆசிரியர்,

'பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை' என்ருர் நாவுக்கரசர். மனிதனுக்கு உயர்வைக் கொடுப்பது உள்ளம்.

'வெள்ளத்தனைய மலர்நீட்டம் மாந்தர்தம் உள்ளத்தனைய உயர்வு.'

என்று திருவள்ளுவர் கூறினர். இதனுற்போலும் ஆன்ருேர் உள்ளத்தைத் தாமரை மலருக்கு உவமித்தனர் என்று எழுதிச் செல்கிருர். ஒரு பாடலை அடிப்படையாக வைத்துக்கொண்டு பல தமிழ் இலக்கியங்களிற் சுவைமிகுந்த பகுதிகளையெல்லாந் துணையாகக் கொண்டு கட்டுரையினை அமைக்கும் ஆசிரியருடைய திறனை நூல் முழுவதிலுமே காணலாம்.

தமிழ் மக்களுக்கு ஞானத் தமிழை இலகுவான முறையிலும் இலக்கியச் சுவையுடனும் எடுத்தோதும் இந்நூலை எழுதிய குகசர்மா அவர்கள் தமிழ் மக்களின் பாராட்டுக்குரியவர். அவர் இத்தகைய சிறந்த படைப்புக்களை மென்மேலும் தமிழுலகுக்கு வழங்கவேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்ருேம்.

"அன்ரன்"
L. P. GAS குக்கர்
ரூ. 575/- மட்டும்
மற்றும் சகலவிதமான
L. P. GAS குக்கர்களுக்கும் (விசேட கழிவு விலையில்)
உங்கள் வீட்டுக்கு தேவையான சகல சாமான்களுக்கும்
இன்றே விஜயம் செய்யுங்கள்
S. P. சாமி அன் கோ
193, மின்சார நிலையவீதி, தொலைபேசி: 7025 யாழ்ப்பாணம்.

# அரங்கும் அவையும்

## 'வாடைக்காற்றும் தமிழ் நாடக உலகும்

கலையுலகில் 'வாடைக் காற்றுப் பற்றிய பேச்சு திரும்பவும் பலமாக அடி படுவதற்குக் காரணம் ஜனாதிபதிப் பரிசு அண்மையில் இப்படத்துக்கு அளிக்கப்பட்டமைதான். 'நாடகம் தாய், சினிமா சேய்'என்ற கண்ணோட்டத்தில் பார்க்கும்போது வாடைக்காற்றுக் கலைஞர்கள் ஈட்டும் இம் மகோன்னத வெற்றியை, தமிழ் நாடக உலகுபெறும் தனியாய பரிசென்றே கூற முடிகிறது. ஈழத்தின் பிரபல நாவலாசிரியர் செங்கை யாழியானின் சிருஷ்டியை, திரை உருவில் அமைத்த பெருமையில் முக்கியபங்கு கொள்ளும் திரு. கே. எம். வாசகர் நாடகமேடை நல்கிய நற்கலைஞன் தான் அரிய பல ஆக்கங்களை அரங்கிலிட்டு கொழும்பு வாழ் ரசிகர்களை பெரிதும் ஈர்த்தவர் இவர். இதன் தயாரிப்பாளர்களில் முதன்மை இடம் வகித்த, குரும்பசிட்டி அ. சிவதாசன் சிறந்த திரைக்கதை வசன கர்த்தாவாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு இருபரிசில்கள் வழங்கப்பட்டுகௌரவிக்கப்பட்டுள்ளார். சிறந்த துணை நடிகர் பரிசை எஸ். ஜேசுரட்ணமும் துணை நடிகை பரிசை செல்வம் பெர்னாண்டோவும் தட்டிக் கொண்டனர். தரமான நடிகர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டமை ரசிகர் உலகுக்கு விருப்பமான அம்சமே.

## மெச்சுகிறேம்; ஆனல்..

அனைத்திலங்கை ரீதியில் கல்வியிலாகா நடத்திய இசை நடன, நாடகப் போட்டிகளில் மலையகப் பாடசாலைகளும் பங்குகொண்டன. சாதாரண நாடகப்போட்டியில் பங்குகொண்டமாத்தளை இந்துமகாவித்தியாலய நாடகங்களில் நடித்த மாணவ மாணவிகளிடம் அபார ஆற்றல் இயற்கையாகவே தேங்கிக்கிடப்பதை அவதானிக்க முடிந்தது. குரல்வளம்கூட நிரம்ப இருந்தது ஆனல் தயாரிப்பு நிலை 1965ம் ஆண்டு நிலையை, அத்துடன் சினிமாத்தாக்கம் சேர்ந்த நிலையை காட்டியது. நாடகத்தை முறையாக ... திருச்செந்தூரன் போன்றவர்கள் மலையக மாணவர்களை முறையாக வழிநடத்த ஆவனசெய்வார்களே யானால் போட்டிகளில் அவர்கள் தரம் விஞ்சமுடியும் சாதாரண நாடகப் போட்டியில் சிரேஷ்ட பிரிவில் 'மக்பெத்' நாடகத்தை மேடையிட்ட இளவாலை புனித ஹென்றியார் கல்லூரியும், கனிஷ்ட பிரிவில் 'ஏகலைவன்' நாடகத்தை நடித்த வடமகளிர் இந்துவும் முதலிடத்தைப் பெற்றன. 'ஏகலைவன்' நாடகத்தில் துரியோதனனாக நடித்த பிள்ளையின் வனப்பு, எதிர்நடிப்புகள் நிலைகள் நாடகத்தை நன்கு தூக்கி காட்டின சுத்தமான தயாரிப்புக்களாக இரு நாடகங்களும் மிளிர்ந்தன.

## கலைப்பேரரசு ஏ.ரீ.பொன்னுத்துரை

கொழும்பில் 'கமலாலயம்' நிறுவனம் அமைத்து பல உயர்ரக நாடகங்களை மேடையிட்டு தாமும் நடிப்பால் அரங்கை அணிசெய்தவர் இப்படத்தில் நடித்த திரு. பாலச்சந்திரன், பிரான்சிஸ், யேசுரட்ணம், கணேசபிள்ளை, ஆனந்தராணி, லடீஸ் வீரமணி போன்றோரும் நாடக உலகில் தனியிடம் பெற்றவர்களே. இதனை நன்கு சுவைத்ததமிழக நாடகக்கலைஞர், சினிமா நடிகர்மேஜர் சுந்தரராஜன், 'வாடைக்காற்றை' தாம் தென்னகத்தில் நாடகமாக நடிக்க விரும்புவதாகக்கூட கருத்துத்தெரிவித்ததைநாம் அறிவோம் 'வாடைக் காற்று'ப்பெறும் ஜனாதிபதிப் பரிசு நாடக உலகு பெறும் கௌரவமெனவே எண்ணத்தோன்றுகிறது.

## இவர்களுக்கு சபாஷ்!

பிரபல நடிகர் எஸ் ராம்தாஸ் 'ஏமாளிகள்' படமூலம் சிறந்த நடிகராகவும், 'கோமாளிகள்' மூலம்

## பொன். பரமானந்தர் ஞாபகார்த்த விழா

1900-ம் ஆண்டிலே பின்தங்கிய கிராமத்திலே பள்ளி அமைத்து எழுத்து கலை, சமயம் என்பன சிறப்புற பணி புரிந்த பொன் பரமானந்தர் ஞாபகார்த்த விழாவும் பரிசளிப்பு விழாவும் தலைமையாசிரியர் திரு சி. கனகசுந்தரம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது 'எழுத்தாளர்கள், கலைஞர்கள் நிறைந்த பண்பான கிராமமாகக் குரும்பசிட்டி மிளிர்வதற்கு பொன். பரமானந்த வித்தியாசாலையும் பொன், பரமானந்தரும்தான் மூலகாரணம்' என வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் குறிப்பிட்டார். ஏ. ரி. பொ. வின் ஸ்தாபகர். ஞாபகம் பேச்சுக்குப் பின் சிறுவர் சிறுமியர்களின் இசை, நடன நாடக நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. செல்வி ரேலம்கி செல்லையா) நடனஆசிரியை) அவர்களின் கைவண்ணம் கலை நிகழ்ச்சிகளை மெருகூட்டியிருந்தன. அன்னப்பட்சிகளின் ஆட்டம் சிந்தைக்கும் விருந்தாயிருந்தன.

---

சிறுவர் ஆண்டு
பாலர் பாட்டு

### யானைத்தாத்தா

சுளகுச் செவியை
அசைத்து அசைத்து
யானைத் தாத்தா
வருகிறார்
தும்பிக் கையைத்
தூக்கி விட்டு
யானைத் தாத்தா
வருகிறார்

●

சுவரைப் போன்ற
உடம்பைத் தூக்கி
யானைத் தாத்தா
வருகிறார்
தோளில் எம்மை
ஏற்றிப் போக
யானைத் தாத்தா
வருகிறார்.

-கல்வயல்
வே. குமாரசாமி

---

# நமது நூல் நிலையம்

நூல்: இரணைமடுத்திருப்பதிகம்.

ஆசிரியர்: திரு. சி. கு. இராசையா, வெளியீடு: குருகுலப் புலவர் வட்டம், கிளிநொச்சி.

'நிலந்தாங்க நீர்தாங்கி
இரணைமடு நீராய்ச்
சலந்தாங்கு வாய்க்கால்
வழியே - நலந்தாங்கிச்
செந்நெல் செழித்தோங்கச்
செல்வியே வோடு
எந்நாளு மேர் ஒன்று தே'

கண்டாவளை கிராமசேவையாளர் சி. கு. இராசையா வால் பாடப்பட்ட கரைச்சி நாச் சிறப்புக் இரணைமடு திருப்பதிகமும் என்ற நூல் கிளிநொச்சி குருகுலப் புலவர் வட்டம் வெளியிட்டுள்ளது

கவிஞன் கண்முன் தோன்றும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் நுணுக்கமாக உற்றுநோக்குகிறான், விசித்திரமான தன் பமே இல்லாத கற்பனை வானில் சிறகடித்துப் பறக்கிறான். இன்ப துன்ப உணர்ச்சி கட்கு மீறும்போதெல்லாம் கவிதை பொங்கும் அமைதியான பழுத்த இதயத்தில் தான் உணர்ச்சிகள் ஒளிவிடும். சில வேளை அவை சுடர்ப் பொறிகளாய்த் தெறித்து வெளிவரும் அப்போது ஆழ்ந்த பொருளையெல்லாம் அழகான சொற்களால் சுவை பொழுக அள்ளிக்கொட்டி இருன் கவிஞன் என்று நூல் பண்டிதர் பி மூ ஞானப்பிரகாசம் வழங்கிய வாழ்த்துரையில் குறிப்பிட்டதுபோல தாம் கண்ட காட்சிகளையும் ஊரின் பெருமைகளையும் கவிஞர் இராசையா அழகாக கவிதை கள் மூலம் எடுத்தியம்பியுள்ளார்.

தொன்மை மிக்க, தொல்வளம்கொண்ட கரைச்சி நகரின் சிறப்பை அழகாக, விரிவாக பத்துப் பாடல்களிலும் விளக்குகிறார் கவிஞர்.

யாழ்ப்பாணத்தின் நெற் களஞ்சியமாக கரைச்சி நகர் திகழ்வதற்குச் சிறப்பமைந்திருக்கும் இரணைமடுக்குளந்தான் முக்கிய காரணம் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளவே வேண்டும். இத்தகைய சிறப்புப்பெற்ற இரணைமடுவின் சிறப்புப்பற்றி இரணைமடுத்தாயிடம் இரட்சிப்புவேண்டி கவிஞர் பாடிய பாடல்கள் மூலம் தமது கவித்துவத்தை நன்றாகப் புலப்படுத்தியுள்ளார்.

●

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் உரிமைக் குரலாக வெளிவரும் 'உலகத் தமிழர் குரல்' பத்திரிகையின் நான்காவது குரல் கிடைக்கப்பெற்றோம்.

குரும்பசிட்டி இரா. கனகரத்தினத்தை ஆசிரியராகவும் ஆ. சண்முகலிங்கத்தை பொறுப்பாசிரியராகவும் கொண்டு வெளிவரும் இப்பத்திரிகையில் உலக நாடுகள் பலவற்றிலும் இடம்பெற்ற தமிழ்- தமிழ் இயக்கங்கள் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் அடுத்த மகாநாட்டை மோரிசியஸ் தீவில் நடத்துவதற்கு தமிழ் நாட்டு அரசின் உதவியுடன் ஏற்பாடுகள் நடைபெறுவதுபற்றியவிபரம் தரப்பட்டுள்ளது

-கே. வி. எம்.

---

# சீனுவின் புதிய தேசிய இனம்

சீனுவின் ராஜ்ய சபை அண்மையில் ஜீனுஒ மக்களை ஒரு சிறுபான்மைத் தேசிய இனமாக அங்கீகரித்துள்ளது. இதன்மூலம் சீனவின் சிறுபான்மைத் தேசிய இனங்களின் எண்ணிக்கை ஐம்பத்திநான்கில் இருந்து ஐம்பத்தைந்தாக உயர்ந்துள்ளது. ஜீனுஒ மக்களின் எண்ணிக்கை பத்தாயிரம் மட்டுமே, அவர்கள் தமக்கென ஒரு சொந்த மொழியைக்கொண்டுள்ளனர். ஆனல் அதற்கு எழுத்து வடிவம் இல்லை, ஹான்-திபேத்தியமொழிக் குடும்பத்தின் ஒரு கிளையான திபேத்திய - பாமிய மொழியிலிருந்து பெறப்பட்ட ஒரு பேச்சு மொழியை இவர்கள் கொண்டுள்ளனர், இந்தப் பேச்சுமொழி பிரதேச வேறுபாடு இன்றி சகல மக்களாலும் ஒரே மாதிரியாகப் பேசப்படுகிறது.

ஜீனுஒ மக்கள் யூனன் மாகாணத்தில் சிசு ஆங்பனுடாய் சுயாட்சிப்பகுதியில் உள்ள ஜீனுஒ லூஸே மக்கள் கம்யூனில் ஒரு தொகுதியாக வாழ்ந்து வருகின்றனர்

சீனுவின் மொழி வல்லுநர்களும், ஊழியர்களும் இப்பகுதிக்குச் சென்று கடந்த இரு வருடங்களாக அம்மக்கள் மத்தியில் இருந்து பல ஆராய்ச்சிகளில் ஈடுபட்டனர், அதன் விளைவாக அந்த மக்களுக்கென ஒரு சொந்த மொழியும் பொருளாதாரத்தில் விசேஷ தன்மையும், பொதுக் கலாச்சாரமும், பொதுப்பழக்கவழக்கங்களும் இருப்பதைஅறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. இவை யாவும் அம்மக்களை ஓர் இனம் என்பதற்குத் தகுதியளிக்கின்றன என்ற முடிவிலேயே சீன அரசாங்கம் ஜீனுஒ இனத்தை சீனுவின் ஒரு தேசிய சிறுபான்மை இனமாக அங்கீகரித்துள்ளது-

ஆதாரம்;
'செம்பதாகை'

---

## எதிர்பார்ப்புகள்

வானம் இருண்டிருக்கு
நீலம் மறைஞ்சிருக்கு
நாளை மழை வரணும்
வந்தாலே—

வீட்டைத்துறந்து வயல்
மேட்டை அடைந்துஉயிர்
போட்டு உழைக்கவெனப்
போவோமே-இந்த
நாட்டைத் தலைநிமிரச்
செய்வோமே

பாளம் வெடிச்சவயல்
புழுதி பறக்கிறது
நாளை மழைவரணும்
வந்தாலே—

மாட்டைக் கலப்பையொடு
ஓட்டி வயல் உழுது
வேர்வை நிலம் நனைக்கச்
செய்வோமே-பச்சைப்
போர்வை படர்ந்துவிட
வைப்போமே

ஆழக் கிணறுகளும்
அடியில் வறண்டிருக்கும்
நாளை மழைவரணும்
வந்தாலே—

ஊற்றுக் கண் திறக்கும்
ஓடி நீர் பெருகும்
வயற் காட்டில் மகிழ்வு
நாம் கொள்வோமே
வாழ்க்கை வளர
தெனச் சொல்வோமே

இளவாலை விஜயேந்திரன்

---

# காஞ்சி பெரியவாள்....

(-ம் பக்கத் தொடர்ச்சி)

"ஒளிமணி வண்ண
னென்கோ ஒருவனென்
றேத்தநின்ற
நளிர்மதிச் சடைய
னென்கோ நான்முகக்
கடவுளென்கோ
அளிமகிழ்ந் துலகமெல்லாம்
படைத்தவை யேத்தநின்ற
களியலர்த் துளவன் எம்
மான் கண்ணனை
மாயனையே"

மேலுஞ் சைவர்கள் சங்கரனும், நாராயணனும் சேர்ந்த (சங்கர நாராயணன் என்னும் மூர்த்தத்தை (அர்த்தநாரீஸ்வரர் போன்று) வழிபட்டு வந்துள்ளனர் இடைக்காலத்திற்றன் வைணவர்கள் சைவர்களைக் 'கண்டுமுட்டு கேட்டுமுட்டு' என்ற நிலையில் வைத்திருந்தனர். இந்நிலையைப் போக்கவே. காஞ்சிப் பெரியவாள் திருப்பாவை, திருவெம்பாவை மகாநாடுகள் நடாத்திவருகிறார்கள். காஞ்சிப்பெரியவாள் இந்நூலைப் படித்தால் பெருமகிழ்ச்சி அடைவதோடு தமது பூரண ஆசியையும் ஆசிரியருக்கு வழங்குவார்கள்.

குகசர்மா அவர்கள் மேற்காட்டிய பரந்த அறிவை எவ்வாறு பெற்றார் என்ற கேள்வி எழக்கூடும் அதற்கு அவ்வறிவை பெரும்பாலும் புராணபடனம் மூலமே பற்றார் எனக் கூறவேண்டும் தமிழ் ஆசிரியராக வரமுயற்சித்த சர்மா அவர்களை இறைவன் தடுத்தாட்கொண்டு புராணபடன வழியிற் திருப்பிவிட்டார் ஆசிரியராகப் போயிருந்தால் ஆயிரக்கணக்கான ஆசிரியர்களுள் இவரும் ஒருவராக இருந்திருப்பார் புராணபடனத்தில் ஈடுபட்டபடியால் சைவ உலகில் தனக்கென ஒரு சிறந்த இடத்தைத் தேடிக்கொண்டார் மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவில், கொல்லங்கலட்டி பிள்ளையார் கோவில், பல்லாசப் பழம் பிள்ளையார்கோவில் முதலிய கோவில்களில் இருபது வருடங்களுக்கு மேலாகக் கந்தபுராணத்திற்கு உரைசொல்லி வருகிறார் தெல்லிப்பழை துர்க்கை அம்மன்கோவிலில் பெரியபுராணத்திற்கும், திருவிளையாடற் புராணத்திற்கும் உரை சொல்லியுள்ளார். மல்லாகம் பழம்பிள்ளையார்கோவிலிலும் துர்க்கை அம்மன்கோவிலிலும் நடைபெற்ற புராணபடனங்களில் ஒழுங்காகப் பங்குபற்றியபடியால் சைவத்தின் மூன்று கண்கள் எனப்படும் கந்தபுராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் ஆகிய மூன்று புராணங்களிலும் உள்ள ஆட்சியை நான் நன்கு அறிவேன்.

மேலும் காலத்திற்குக் காலம் வெளிவரும் சமயம், இலக்கியம் சம்பந்தமான நூல்களைப் படிக்க இவர்கள் தவறுவதில்லை. இப்படிப் பல நூல்களைப் படித்துத் தமது அறிவை விசாலமாக்கிக் கொண்டார்கள்.

இப்படித் தமிழையும், சைவத்தையும் வளர்த்துவரும் சர்மா அவர்களுக்குச் சைவ உலகம் மிகவும் கடமைப்பட்டுள்ளது. இதை உணர்ந்து இப்போது சில அன்பர்கள் நிதி சேர்த்து. இந்நூலை வெளியிடுவதற்கும், பொற்கிழி வழங்கிப் பாராட்டுவதற்கும் முன்வந்துள்ளார்கள். இது ஒரு ஆரம்ப முயற்சியென்று கருதுகின்றேன். சைவத்திற்கும் தமிழிற்கும் மேலும் சிறப்பாக உழைக்க, சர்மா அவர்களுக்கு சைவ மக்கள் வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பார்களாக இதற்கு இறைவன் அருள்புரிவாராக

# கருணைக் கடவுள் கதிர்காமக் கந்தன்

ஈழத்திரு நாட்டில் பழமையும் புதுமையும் வாய்ந்த சரவாலயமாகவும் அன்பர்க்கு அருள் புரியும் ஆறுமுகன் எழுந்தருளியிருக்கும் புனித தலமாகவும் கதிர்காமம் அமைந்துள்ளது. இலங்கையின் ஊவா மாகாணத்திலே மொனருகலை மாவட்டப்பிரதேசத்திலே கோவில்கொண்டிருக்கிறார் கதிர்மலைக் கந்தவேள்.

கதிர்காமம் கதிரைமலையையும் மாணிக்க கங்கையையும் சார்ந்தது என்பது வரலாறு.



வரலாற்றுப் பெருமையுடன் சிறப்புற்றிருந்த இவ்வாலயத்தை சூறையாட 2000 படை வீரர்களுடன் சென்ற போர்த்துக்கேயர் வழி தெரியாமல் காட்டில் அலைந்து மீண்ட வரலாறு அறியக் கிடக்கிறது. எவ்வித எடுப்புமின்றி மிகவும் சிறியதாய் அமைந்திருக்கும் ஆலயத்தின் முன்பக்கத்தில் பெரிய தோரணவாயிலுள்ள மதில்கள் உள்ளன. கதிர்காமநாதன் வீதியுலா வரும் வீதி முக்கோண வடிவில் அமைந்துள்ளது. இங்கே ஆண்டுதோறும் நான்குமுறை சிறப்பாக திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

சித்திரை வருடப்பிறப்புத் தினத்திலும் ஆனிமாதத்திலும், ஆடி மாதத்திலும், கார்த்திகை மாதத்தில் வரும் திருக்கார்த்திகையின் போதும் பக்தர்கள் படையெடுப்பர். இவ்விழாக்களுக்கு வரும் யாத்திரிகர்கள் முற்காலத்தில் காடு களுக்கூடாக 'முருகா முருகா' என்றும் 'அரோகரா' எனவும் மனமுருக மெய் புளகாங்கித மெய்த ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் கூட்டம் கூட்டமாக நடந்துசெல்வது வழக்கம்: போக்குவரத்துப் பாதைகள் வாகன வசதிகள் வந்துவிட்டும் பக்தர்கள் கால்நடையாய் போய்வரும் வழக்கமுமுண்டு.

கதிர்காமம் வாழ்
தேவர் பெருமானே!

இவ்வாலயத்தின் தீர்த்தச் சிறப்பை புகழாத பெரியோர்கள் இல்லை எனலாம்.

தேசய் நொடிகளைத் தீர்க்க வமல மாணிக்ககங்கை தீர்த்தச் சிறப்பை:-

கண்டாலும் கேட்டாலும்
கழுவினாலும்
கை தொட்டுத்
தெளித்தாலும்-காதலாக
உண்டாலும் உதைத்தாலும்
வினைகள் -யாவும்
ஒருக்காலும் நெருங்காமல்
ஓட்டித் தேவர்
கொண்டாடும் படியோடும்
புனல் சேர் சோதி
குலவுமணி
மாணிக்ககங்கை

என சோமசுந்தரப் புலவர் பாடியுள்ளார்.

கதிரை மலையான் என்று ஆயிரந்திருநாமஞ் சொல்லி உள்ளம் உருகி உணர்ச்சி வசப்பட்டுத் தம்மை மறந்து வழிபடும் அடியவர் பலர்க்கு கதிர்காமநாதன் நல்வாழ்வு கொடுப்பான்.

திருவிழா நாட்களில் பக்தர்கள் எளிமையாக வழிபடும் காட்சி உருக்கமானது. வேல் குத்திக் காவடியெடுத்தல், கற்பூரச்சட்டி எடுத்தல், நேர்ந்து பிரதட்டைகள் நெஞ்சையும் கரையச் செய்யும். ஏழை-பணக்காரர் என்னும் ஏற்றத் தாழ்வின்றியும் சாதி சமய இன, மொழி வேறுபாடின்றியும் கதிர்காமக்கந்தனை எல்லோரும் வழிபடும் முறை மிகவும் உருக்கமானது துன்பத்தில் வருபவர்க்கு இரக்க சிந்தையுடைய கதிர்காமப் பெருமான் அருள் புரிவான் என்பதை அருணகிரிநாதரின் இப்பாடல் எடுத்துக் கூறுகிறது.

இதமொழி பகரினும்
மதமொழி பகரினும்
ஏழைக்கிரங்கும்
பெருமானே
கருணை மேருவே ஈறில்
கருணை வாரியே-ஈழ

மலைகள் தோறும் குடியிருக்கும் மயில்வாகனன் கதிரைமலையிலும் உள்ளான் என்பதை அருணகிரிநாதர்,

பதிகள் பலவாயிரங்கள்
[மலைகள் வெகு
கோடி நின்ற
பதமடியர் காணவந்த
கதிர் காமா!
கதிர்விடு வேலைக்
கதிரினின் மேவிக்
கலை பல தேர் முத்
தமிழ் நாடா!
மணிநரனம் வீசி
அணிமருவி சூழ
மருவுகதிர் காமப்
பெருமானே!

என்று அழகாகப் பாடிப் போற்றியுள்ளார்.

இராமாயண காலத்துக்கு முன்னரே வழிபாட்டுத் தலமாயிருந்தது என்பதையும் விஜயன் இலங்கைக்கு வருவதன் முன் கதிர்காமத்தில் வேடர்கள் வழிபாடு செய்தனர் என்பதையும் பழம்பெரும் நூல்களில் காணக்கூடியதாக இருக்கிறது. ஆதியில் இவ்வாலயத்தைத் தமிழ் வேடர்கள் வழிபட்டனர் என்பதை அருணகிரிநாதரின் பாடலில் வரும் "வனமுறை வேடன் அருளிய பூசை மகிழ் கதிர்காமம் உடையோனே" என்பது எடுத்துக்காட்டுகிறது.

ஆ. திருமுருகன்
(யாழ். இந்துக் கல்லூரி)

## உலகுய்ய அருள்புரிவாய்

ஓம் என்ற பிரணவமாய்
ஒளிர்கின்ற வேலவனே
உலகெல்லாம் ஓங்காரம்
ஊட்டுகின்ற திருமுருகா
அருள் வேண்டி வருபவர்க்கு
அபயம் அளிப்பவனே
உன்னடி போற்றுகின்றேம்
உலகுய்ய அருள்புரிவாய்.

-செல்வி கோணேஸ்வரி ஆறுமுகம்
(இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.)

# மாணவர் எண்ணம்

'கண்டோஸ்'

## "கொரில்லா அரக்கன்"

அத்தியாயம் (1)

தீபராஜனின் கை பதுமை மீது பட்டதும் அழகிய அப்பதுமை விலகியது. பதுமை விலகிக்கொண்டதும் அவ்விடத்தில்...ஒருசுரங்கப்பாதை தோன்றியது!

இதனைக் கண்ட தீபராஜனின் கண்கள் ஆச்சரிய மிகுதியால் அகல விரியலாயிற்று. பின்னர்தான் அரசருக்கு விஷயம் புரிந்தது.

முன்னோர், ஆபத்தின்போது தாம் தப்பிச் செல்வதற்காகவும், பாதுகாப்பிற்காகவும் இச்சுரங்கத்தை அமைத்துக் கொண்டனர் என்பதை முன்னர் ஊகித்துக்கொண்டார்.

பின்னர் அந்தச் சுரங்கப் பாதைவழியே இறங்கிச் செல்லலானன் தீபராஜன். சுரங்கப் பாதையின் இறுதியில் ஒரு அழகிய மண்டபம் இருப்பதைக்கண்ட தீபராஜனுக்கு ஆச்சரியம் இரட்டிப்பாகியது.

அரசர் அழகிய சுரங்கப் பாதையைச் சுற்றிப் பார்த்துவிட்டு சுரங்கப் பாதைவழியே மீண்டும் தனது அறையை அடைந்தார் பின் தீபராஜன் மீண்டும் அழகிய பதுமையைத் தொட்டார். அடுத்து... அழகிய பதுமை நகர்ந்து மீண்டும் சுரங்கவழியை மூடிக்கொண்டது.

தீபராஜனுக்கு ஆச்சரியம் ஒருபுறம், மகிழ்ச்சி ஒருபுறம்.

அரசருக்கு அப்போது ஒரு யோசனை தோன்றியது.

தனது மகள் தீபாவின் கெடுகாலம் முடியும்வரையும் எவரும் செல்லமுடியாத சுரங்க மாளிகையில் வைத்துப் பாதுகாப்பதென முடிவுசெய்தார் அரசர்.

அதன்படியே மறுநாள் தீபராஜன் தன் மகள் தீபாவுக்கு வேண்டிய சகல வசதிகளையும் செய்து அவளை சுரங்க மாளிகையில் இருக்க ஏற்பாடுசெய்தார். ஆனால் இதுகுறித்து அரசி வல்லிதேவிக்கோ, மற்றவர்களுக்கோ அரசர் ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை.

அரசி வல்லிதேவி தனது மகளைச் சிறிது நாட்களாகக் காணாததனால்கண்டு, அரசரிடம் சதா வினவினாள்.

தீபராஜனோ 'தீபா பாதுகாப்பாக இருக்கிறாள்' என்று மட்டுமே கூறினான்.

ஆனால் அரசி, தீபராஜனின் கூற்றை நம்ப மறுத்தாள். மகளின் சிந்தனையினால் அரசி சரிவர உண்ணாமலும், சரிவர உடம்பைக் கவனிக்காமலும் இருந்ததினால் சிறிதுநாட்களுக்குள் நோய்வாய்ப்பட்டுபடுத்த படுக்கையிலேயே இருக்கவேண்டியதாயிற்று. அரசர்கூட தனது மகளைக் காணமுடியாது தவிக்கலானார்.

சுரங்கமாளிகை வாசத்தை தொடங்கிய தீபா.பல நாட்கள் நித்திரையிலும் சொற்ப வேளையேகண்விழித்தும் காலம் தள்ளலானாள்.

பாவம் தீபா! ஒருவருடனும் சேர்ந்துபழகாமலும், வெளியே செல்லமுடியாமலும் அழகிய அந்தச் சுரங்க மாளிகையில் எத்தனை நாட்கள்தான் அடைபட்டிருப்பது? தீபாவிற்கு விரைவிலேயே வாழ்க்கையில் சலிப்புத்தட்டலாயிற்று. இதனால் தீபா நித்திரையிலேயே அதிக நேரத்தைக் கடத்தி வந்தாள்.

இவ்வாறாக ஒருவருடம் உருண்டோடியது. இன்னும் கெடுகாலம் முடிவடைய மூன்றே மூன்று தினங்கள்தான் பாக்கியிருந்தன!

அன்றும் தீபா தனது பொழுதைக் கழிப்பதற்காக அழகிய சுரங்க மாளிகையில் அமைந்திருந்த அழகிய ஓவியங்களையும் அழகிய வேலைப்பாடுடைய சிற்பங்களையும் பார்த்தவாறே மாளிகையைச் சுற்றிவரலானாள்.

மாளிகையைச்சுற்றி வந்த தீபாஓரிடத்தில்தன்முன்னே... ஒரு அழகிய மான் குட்டி நிற்பதைக் கண்டு திகைத்தாள். 'இது எப்படி இங்கு வந்தது? ஒருவராலும் புகமுடியாத சுரங்க மாளிகையாயிற்றே! ஒருவேளை எனது தந்தையார்தான் அனுப்பியிருப்பாரோ' என ஆச்சரியப்பட்டவாறு அந்த அழகிய மானைப்பிடிக்கச் சென்றாள்.

[9ம் பக்கம் பார்க்க]

வி. சந்திரகுமார்

## மாணவச் சிரிப்பு

ஆங்கில ஆசிரியர்:
லெட் அஸ்ஸை என்றால் என்ன?
மாணவன்: வாங்குவோம்.
ஆங். ஆசிரியர்: ஐ டோன்நோ என்றால் என்ன?
மாணவன்: எனக்குத் தெரியாது.
ஆங். ஆசிரியர்: உனக்குத் தெரியாதா? கையை நீட்டு.
மாணவன்: ?...?...?

●

நகைவியாபாரி:
என்னடா நான் கறி வாங்கப் பணம் கொடுத்தேன் நீ பட்டாசு எதற்காக வாங்கி வந்தாய்.
மகன்: நீங்கள் தானே காசைக் கரி ஆக்காதே என்று கூறினீர்கள்.

யோ. கிரிதரன்
திருநாவுக்கரசு வித்தியாசாலை. கொடிகாமம்

# பேனா நண்பர்கள்

"பேனா நண்பர்" பகுதி ஆரம்பிக்கப்பட்டதும் பாராமுகங்களுடன் முகவரிகளும் வந்து குவிந்துகொண்டிருக்கின்றன. அறிவித்தல்கொடுத்துங்கூட சிலர் தமது பாடசாலைகளின் பெயரைக் குறிப்பிடாது தமது முகவரிகளை அனுப்பிவருகின்றனர். இந்த விதியைத் தொடர்ந்தும் மீறமாட்டீர்கள் என்ற நம்பிக்கையுடன் எமக்கு வந்த முகவரிகளைத் தொடர்ந்து பிரசுரிக்கிறோம்.

ரி. கண்ணன்,
96/3, கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

செங்குந்தா இந்துக்கல்லூரி-வயது 19. பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், விளையாட்டு.

●

த. மகேஸ்வரன்,
107/2, கச்சேரி - நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ் இந்துக்கல்லூரி, வயது-10. பொழுது போக்கு: வானொலிகேட்டல், கதைபடித்தல். கரம் விளையாடுதல்

●

செல்வி வசந்தி குணரத்தினம்,
6, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்,

புனித சாவியர் ம.வி. யாழ்ப்பாணம், வயது-14. பொழுது போக்கு: வானொலிகேட்டல், நாவல் படித்தல்'

●

இ வரதீஸ்வரன்,
'விஜய வாசா'
வதிரி,
கரவெட்டி

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம். வயது - 16. பொழுதுபோக்கு: கதை எழுதுதல், கதை படித்தல், நாடகம் நடித்தல், எழுதுதல்

●

கே எஸ் மனோகரன்.
7, 57வது ஒழுங்கை,
கொழும்பு-6

கொழும்பு இந்துக் கல்லூரி, இரத்மலானை, வயது - 17 பொழுபோக்கு: வானொலி கேட்டல், விளையாடுதல், முத்திரை சேகரித்தல்

●

செல்வி ராஜேஸ்வரி
திருநாவுக்கரசு,
ஆத்தியடி,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி

வட இந்து மகளிர் கல்லூரி, வயது - 18 பொழுபோக்கு: காட்சி படம் சேகரித்தல், வானொலி கேட்டல்

●

கே சிவலோகநாதன்,
யாழ் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

வயது-21. பொழுதுபோக்கு: நாவல் படித்தல், முத்திரை சேகரித்தல், கோழிவளர்த்தல், கிரிக்கட் விளையாடுதல்.

●

இரு வெளிநாட்டு பேனா நண்பர்களின் முகவரிகள் இதோ:

Miss A. V. S EWA
Westerberg,
Rodinguagen 7,
97100 Malmberget,
Sweden.

வயது-16. பொழுதுபோக்கு: தொலைக்காட்சி நோக்கல், கலைகலாச்சாரம்பற்றி அறிதல், முத்திரை சேகரித்தல், உலக நாடுகளின் சமய ரீதியான ஆராய்ச்சியில் ஈடுபாடுடையவர்.

●

Miss Maka Soliva,
P. O. Box 139
Set, Fruejaacous
Paris, 75070
France

வயது - 18. பொழுது போக்கு: முத்திரை சேகரித்தல். தொலைக்காட்சி நோக்கல், சதுரங்கம், கரம் விளையாடுதல்

'பேனா நண்பர்'
மாணவர் எண்ணம்
'ஈழநாடு'
யாழ்ப்பாணம்.

நாகம்ஸ் [சுன்னாகம்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
மனிதனும்
தெய்வமாகலாம்

வெலிங்டன்... 

வெல்லி
காங்கேசன்துறை
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எஸ். எஸ். ஆர்.-
ராஜசுலோசனா
சிவகெங்கைச் சீமை

றியோ போன்: 7607
[நகரமண்டபம்]
தினசரி: 10-30, 4-45, 7-00,
MAN OUTSIDE
Murder - Thrill


## கொரில்லா... ...

[8-ம் பக்கத் தொடர்ச்சி]

அப்பொழுது... ஒரு குரல் "நில்... இளவரசி தீபாவே நில்! மானைத் தொடாதே... நில்" என்றது, சற்று அதட்டலாக.

இதனைக் கேட்ட தீபா ஆச்சரியத்துடன் நின்று திரும்பி சுற்றுமுற்றும் பார்த்தாள். ஆனால் அங்கு... யாரையும் காணாததைக் கண்டு அது ஏதோ பிரமை என நினைந்து மீண்டும் மானைப் பிடிக்க முயன்றாள்.

அப்பொழுது ... மீண்டும் குரல் "நில் தீபா! நீ பிடிக்க முயல்வது மானையல்ல, ஒரு கொடிய அரக்கனையே! அவன் தான் கொடிய கொரில்லா அரக்கன். உன்னைக் கவர்ந்து செல்வதற்காகவே இவன் மாறுவேடத்தில் வந்திருக்கின்றான்!" என்றது.

(வளரும்)



இலங்கைவங்கியின் 40-வது ஆண்டு நிறைவையொட்டி யாழ்ப்பாணம் இலங்கை வங்கிக் கிளையினர் நல்லூர் சிவன் கோவிலில் ஏற்பாடுசெய்திருந்த விஷேட இந்துசமய வழிபாட்டில் வடபிரதேச இலங்கை வங்கி முகாமையாளர் திரு. எம், ஜே. ஜெகநாதன் பூசகரிடமிருந்து காளாஞ்சி பெறுவதை முதலாவது படத்திலும், இலங்கைவங்கி யாழ். இரண்டாவது கிளைமுகாமையாளர் திரு. எம். கனகரத்தினம் காளாஞ்சி பெறுவதை இரண்டாவது படத்திலும், வைபவத்தில் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட அமைச்சின் செயலாளர் திரு. யோகேந்திரா துரைசுவாமியும், முன்னை நாள் யாழ். பொலிஸ் அதிபர் திரு. லியோ பெரேராவும் காணப்படுவதை மூன்றாவது படத்திலும் காண்க.


வெலிங்டன் தினசரி: 10-30, 2-30, 6-30, & 9-45
[யாழ்ப்பாணம்]
கே. பி. சுந்தராம்பாள் நடித்த
ஒளவையார்

விஜே போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
கல்யாணபரிசு
(புதிய பிரதி)

4th AND FINAL WEEK !
SHANTHI JAFFNA Phone: 7642
10-30, 2-30, 4-45, 7-00 & 9-30 p.m
"Mr. MAJESTYK-" Adults Color
Dont Miss This Action Packed Movie
8-8-79 "THE ODESSA FILE" Suspense! Color
Coming! "JUGGERNAUT Suspense Thriller

Sridhar - Jaffna
LAST FOUR DAYS
Daily 5 Shows at: 10-30 a.m, 1-30, 4-15, 7-00 & 9-45 p.m.
The Day of THE JACKAL (Color)
SUPERB SUSPENSE THRILLER...
"ஜக்கோல்" கலர்

ராணி தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்) சிவாஜி-ஜமுனா
நிச்சய தாம்பூலம்
(புதிய பிரதி)

வின்சர் போன்: 466
(யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
10-30, 2-00, 6-00,
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

REGAL NOW SHOWING
(Jaffna) Daily at 2-00, 4-30, 7-00 p.m. only
SOPHIA LOREN in
Scandle In Sorrento
(Color)
From 9th THE OMEN

ராஜா தினசரி 4 காட்சிகள்
யாழ். நகர் எம்.ஜி.ஆர் : ஈ. வி. சரோஜா
நடித்த
கொடுத்து வைத்தவள்
(புதிய பிரதி)
8-8-79 முதல் நெஞ்சிருக்கும் வரை

மனோகரா 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ். நகர்) இன்று மட்டும்
பத்மினி-ராகினி-சுகுமார்
சபரிமலை ஸ்ரீ ஐயப்பன்
(பக்திப்படம்—ஈஸ்மன் கலர்)
நாளை முதல் ராணி சம்யுக்தா !


## சிறுகதை

3-ம் பக்கத்தொடர்ச்சி]

"ஆமாம் நாலு வருசங்கள் எடுத்தன"

கோபத்தோடு புத்தகங்களை முற்றத்தில் எறிந்தவள் தன் தலையிலே அறைகிறாள், 'ஐயோ...எத்தனை அக்கினிப் பிரவேசங்களை தடுத்து விட்டீர்கள்'

நான் புதிய வேகத்தோடு திரும்பி நடக்கிறேன்.

இனி என் வாழ்வும் அக்கினிப் பிரவேசம்தான்.

(யாவும் கற்பனை)

## எண் சோதிடத்தில்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ரர்களின் கோபத்துக்கு ஆளாகநேரிடலாம். குடும்பத்தில் நல்லுறவு நிகழும், சகோதர உதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பார்த்திராத தடைகள் ஏற்படலாம், சிலர் குடும்பத்தில் பிணி துயர் ஏற்படும். ஆயுதபீடைக்கும் இடமுண்டு.

எண்: 7

இவர்களுக்கு இந்த வாரம் குடும்பத்தில் நிம்மதியான சூழ்நிலை ஏற்படும். எதிர்பாராத வெற்றி கிட்டும், நீண்டநாள் காத்திருந்த செய்தியொன்று கிட்டும். முன்முதலிட்ட வியாபாரத்தால் லாபம் கிடைக்கும், அதிர்ஷ்டகரமான நண்பர்கள் முதலுடன் வந்துசேருவார்கள். குடும்பத்தில் நன்மையான கருமங்கள் நடைபெறும், கவர்ச்சியான நடை உடை பாவனைகள் தோன்றும், சுகம் நிறைந்த கவர்ச்சியான வாழ்க்கையே கூடுதலாக அமையும். வாகன பூமிப்பேறுகளும் சிலருக்குக் கிடைக்கலாம்.

எண்: 8

இவர்களுக்கு இந்த வாரம் மனச் சந்தோஷமான நிகழ்ச்சிகள் இடம்பெறும். பெரிய மனிதர்கள், மேலதிகாரிகள் போன்றவர்களின் ஆதரவு கூடும், நண்பர்களின் உதவியுமுண்டு, பொருள் லாபம் உண்டு, வாழ்க்கையில் களிப்பு மிகுதியாகும், களங்கிரகம் இருப்பினும் பேராசைக்குணமும் அதிகமாக இருக்கும்' சிலருக்குக் கொடுக்கல் வாங்கலில் இருந்த மனஸ்தாபங்கள் நீங்கும், அரசியல்வாதிகளுக்கு இந்த வாரம் அதிகாரத்தொனி கூடுதலாக இருக்கும், பொது ஜன ஆதரவும் பெருகும், ஊனம் அறிந்தும் நியகாரியங்களில் இறங்கவேண்டியநிலை சிலருக்கு ஏற்படலாம்.

எண்: 9

இவர்களுக்கு இந்த வாரம் தெய்வ நம்பிக்கையுடன் வாழ்க்கை முன்னேற்றம் காணும், புகழும் பேசப்பேச்சியமும் உண்டாகும், உறவுகள் பலப்படும், பெரும்பாலும் அனுகூலமான பலன்களை எதிர்பார்க்கலாம், இவர்களில் சிலருக்கு உதவிசெய்ய அநேகர் தயாராக இருப்பார்கள்.

பொருள் லாபமும் எடுத்த கருமங்களில் வெற்றியுமுண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தேக ஆரோக்கியம் சிறிது பாதிக்கப்பட்டாலும் சமாளித்துக் கொள்ளக்கூடியதாகஇருக்கும்! இலருக்கு மனைவி வழியால் துக்க கருமங்கள் நடக்கவும் கூடும்.

'வரசி,
சி. அ. செல்வத்துரை
கரவடி,
ஆனைக்கோட்டை,

பாடசாலை நாட்களில்

## கல்விக்கந்தோர்வரும் ஆசிரியர்மீதுநடவடிக்கை

[உடுப்பிட்டி]

பாடசாலை நேரங்களிலும் பாடசாலைநாட்களிலும் யாழ். கல்வித் திணைக்களத்திற்குச் செல்லும் ஆசிரியர்கள் மீதும், ஊழியர்கள் மீதும் வடமாநிலக் கல்வி அதிபதி திரு. தி மாணிக்கவாசகர் கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளார்.

பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களும், ஊழியர்களும் தத்தமது பாடசாலை அதிபர்களின் எழுத்துமூல அதிகாரமின்றிக் கல்வித் திணைக்களத்திற்கு செல்லக்கூடாதென கல்வி அமைச்சு சுற்றுநிருபம் மூலம் எச்சரித்திருக்கிறது.

எனினும் இச்சுற்று நிருபத்தை மீறி பாடசாலை நாட்களில் பாடசாலை ஆசிரியர்களும் ஊழியர்களும் யாழ்.கல்வித் திணைக்களத்திற்கு வருவதை அவதானித்த வடமாநில கல்வி அதிபதி இத்தகைய ஆசிரியர்களுக்கும் ஊழியர்களுக்கும் எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்று எச்சரித்துள்ளார்.

பாடசாலை அதிபர்களும் மிக அவசரமான உத்தியோக பூர்வமான கருமங்கள் இருந்தாலன்றி பாடசாலை நேரங்களில் கல்வித் திணைக்களத்திற்கு வருவதைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும் என்றும் அவர் அறிவித்துள்ளார். (க)

## சிந்துவெளி.....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்குளம் ஒன்று காணப்படுகின்றது.

கோவில்கள்

சிந்துவெளி அகழ்வாராய்ச்சியை மேற்கொண்ட சேர் ஜோன் மார்சல் தலைமையிலான குழு இப்பகுதியைத் துருவித்துருவி ஆராய்ந்தபொழுதும் இங்கு எதுவித கோவில்களும் காணப்படவில்லை. எனினும் இங்கு கண்டெடுக்கப்பட்ட ஒரு முத்திரையில், கோவில் போன்ற ஒன்றின் முன் நந்தி நிற்பதுபோலக் காணப்படுகிறது. உரமான கோவில்களைக் கட்டி வாழ்ந்த சுமேரியரோடு வாணிபத் தொடர்புகொண்டிருந்த சிந்துவெளி மக்கள் கோவில்கள் இன்றி வாழ்ந்தனர் என்பது பொருந்தாக் கூற்றாகும். ஆதலால் இங்குவாழ்ந்தமக்கள் மரம் முதலாய அழியும் பொருட்களால் கோவில்கள் கட்டியமையால் அவை இன்று அழிந்துவிட்டிருத்தல் இயல்பாகும்.

மேற்குறிப்பிட்ட இந்துசமயத்தின் மூலாதாரங்கள் சிந்துவெளி அகழ்வாராய்ச்சியில் எமக்குப் புலனாகியமையால் "சிந்துவெளி மக்கள் இந்து சமயத்தவரே" என்பது எமக்குத் தெளிவாகின்றது.

## கோர்ட்கலையும்வரை மறியல்

(புலோலி)

நீதிமன்ற வளவினுள் ஒழுக்கமாக நடந்துகொள்ளத் தெரியாத நபரொருவர் கோடு கலையும்வரை மறியலில் இருக்க நேர்ந்தது.

பருத்தித்துறை நீதிமன்ற வளவில் ஒழுங்கீனமாக நடந்துகொண்ட இந்நபர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு கே. ஞானச்சந்திரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோதே அந்நபரைக் கோடுகலையும்வரை மறியலில் வைக்கும்படி நீதவான் உத்தரவிட்டார். (அ)

## கடலட்டை ஏற்றுமதி 66 லட்சம்!

[யாழ்ப்பாணம்]

வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம், இவ்வாண்டு தைமாதம் தொடக்கம் ஜூன் மாதம் இறுதிவரை கடலட்டைகளை சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்ததன்மூலம் 66 லட்சம் ரூபாவை அந்நியசெலாவணியாக பெற்றுள்ளது.

இவற்றைவிட பங்களாதேஷுக்கு இக்கால எல்லைக்குள் சங்கு ஏற்றுமதிமூலமும் ஐந்து லட்சத்து 81 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது.

இவ்வறிக்கைகள் சமாஜத்தின் அரையாண்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன. (செ)

சுழிபுரம் பறாளை விநாயகர் ஆலய

# பழைய தேரின் கலை நுட்பங்களுக்கு பாதுகாப்பு

## நூதனசாலையில் வைக்க அமைச்சர் ஏற்பாடு

(சங்கானை)

நாட்டில் வாழும் சகல இன மக்களினதும் கலை, கலாச்சாரத்தை எதிர்கால பிரசைகளும் அறிந்துகொள்வதற்காக அவற்றை பேணிப் பாதுகாத்துவைத்திருக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கமைய இந்துக்களின் கலை நுட்பத்தையும் அதன் கலை வன்மையும் பிரதிபலிக்கும் வகையில் சுழிபுரம் பறாளை ஈஸ்வர விநாயகர் ஆலய பழைய தேரில் பொறிக்கப்பட்டுள்ள கலை நுட்பத்தை பாதுகாத்து வைப்பதற்கு அதனை யாழ். நூதனசாலையில் வைக்க கலாச்சார மந்திரி உத்தேசித்துள்ளார் என்று தெரிகிறது.

இந்தப் பழைய தேருக்குப் பதிலாக புதிய தேர் ஒன்றை உருவாக்குவதற்கு அரசினர் நிதி உதவி வழங்கப்படவிருப்பதாகவும் தெரிகிறது. இந்தப் பழையசித்திரத்தேரை பொறுப்பேற்பது பற்றிய விபரங்களை தெரிவிக்குமாறு வலி மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு எம் சுப்பிரமணியத்தை யாழ் பிரதேச புதைபொருள் ஆராய்ச்சி அத்தியட்சகர் திரு எம் செல்வரத்தினம் கடிதமூலம் கோரியுள்ளார்.

### பௌர்ணமி கலைவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகராட்சி மன்றம் நியூ விக்ரேஸ் ஸ்தாபனத்தின் ஆதரவுடன் நடாத்தும் பௌர்ணமி கலைவிழா எதிர்வரும் 7ம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ் திறந்தவெளி அரங்கில் நடைபெறவிருக்கின்றது.

இவ் விழாவை யொட்டி நடாத்தப்படும் கலை நிகழ்ச்சிகளில் கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ கிருஷ்ணலீலா நாடகமன்றத்தின் 'தியாகச்சுடர்' நாடகமும், நியூ விக்ரேஸ் அளிக்கும் 'போறின் மாப்பிள்ளை' நகைச்சுவை நாடகமும் நடைபெறவிருக்கின்றன. [ஈ]

### இயமநியமங்களில் சிறிதேனும் திறம்பாதவர்

"யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு இராஜஇராஜேஸ்வரி அம்பாள் ஆலய பிரதம அர்ச்சகருக்கு இன்று பாராட்டுவிழா நடாத்துவது மிகவும் பொருத்தமாகும்.

சைவாசார சீலரான திருவாளர் செ. இரத்தின சபாபதி ஐயர் அவர்களின் தன்னலமற்ற சேவைத்திறனையும், அயராத உழைப்பையும் இயமநியமங்களில் சிறிதேனும் திறம்பாத சைவாசார சீலத்தையும் நினைவுகூர்ந்து இக் கிராம மக்கள் எல்லோரும் சேர்ந்து பொற்கிழி வழங்குகின்ற பெருஞ்செயல் பெரிதும் போற்றப்படவேண்டும்.

ஐயா அவர்களும் இக்கிராம நன்மக்களும் எல்லாச் செல்வமும், எல்லா நலன்களும் பெற்றுச் சிறப்புற்றுப்பொலிய வேண்டுமென்று உலக மாதாவாகிய இராஜஇராஜேஸ்வரி அம்பாளை வணங்குகின்றோம்.,

-மு. ஞானப்பிரகாசம், ஏழாலை.

[இன்று மாலை யாழ் நாயன்மார்கட்டு இராஜஇராஜேஸ்வரி அம்பாள் ஆலய பிரதம அர்ச்சகர் திரு. செ. இரத்தின சபாபதிக்கு மேற்படி ஆலய மண்டபத்தில் பாராட்டுவிழா நடைபெறுகின்றது']

### கல்வி

G. C E O/L ஆகஸ்ட் பரீட்சைக்கான கணக்கியல், பொருளியல், வர்த்தகம் வினாவிடைகள் ஒவ்வொன்றும் 6/50. கிடைக்குமிடங்கள்: பூபாலசிங்கம் புத்தகசாலை, ஸ்ரீலங்கா புத்தகசாலை. வெளியீடு: மரினா இன்ஸ்டிடியூட், 109/6, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 3241

### உணவு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்தினரும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் இத்தகவல்கள் வெளியிடப்பட்டன.

பின்வரும் தகவல்களும் இக்கட்டத்தில் வெளியிடப்பட்டன.

செப்டம்பர் முதலாம் திகதி புதிய திட்டம் அமுலுக்கு வருகின்றது. ஆகஸ்ட் 13-ம் திகதி முதல் 20-ம் திகதிவரையில் இம்முத்திரைகளைப் பெறுவதற்கான படிவங்களை கூட்டுறவுக் கடைகளிலும், உத்தரவுபெற்ற பங்கீட்டுப் பொருள் விற்பனையாளர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

ஆகஸ்ட் இருபத்தி ஆறும் திகதி முதல் 30-ம் திகதிவரை முத்திரைகளைப் பாவனையாளர்கள் பெற்றுக்கொள்ளலாம். இப்பொழுது கூப்பன் புத்தகம் வைத்திருப்பவர்களும், உணவுக் கூப்பன் பெறுவதற்குத் தகுதியுடையவர்களுமே விண்ணப்பிக்கலாம்.

கூப்பன் இல்லாதிருந்தும் உணவு முத்திரை பெறுவதற்குத் தகுதியுடையவர்களுக்கு செப்டம்பர் மாதம் 2-வது வாரத்தில் உணவுமுத்திரைகள் வழங்கப்படும்.

மூன்று மாதத்திற்கு ஒருமுறை உணவு முத்திரைகள் வழங்கப்படும். மாதம் ஒன்றுக்கு 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 15 ரூபாவுக்குப் பெறுமதியான உணவு முத்திரைகளும், 8 வயது முதல் 12 வயது வரையானவர்களுக்கு 20 ரூபா பெறுமதியான உணவு முத்திரைகளும், 8 வயதுக்குக் கீழ் உள்ளவர்களுக்கு 25 ரூபா பெறுமதியான உணவு முத்திரைகளும் வழங்கப்படும்.

இதனால் அரசுக்கு 200 கோடி ரூபா செலவு பிடிக்கிறது. இந்த உணவுமுத்திரைகள் பணத்துக்குச் சமமானவை என்றும் பாவனையாளர்கள் இதனைக்கொடுத்து அரிசி, நெல், மாவு, சீனி, உள்ளூரில் உற்பத்தியாகும் பருப்பு, பரகுப்பாகட்டிப்பால், கருவாடு போன்றவற்றைப் பெறலாம். கூட்டுறவுக்கடைகளிலும், உத்தரவுபெற்ற வியாபாரிகளிடமும் பாண் இல்லாவிடில் பேக்கரிகளில் உணவு முத்திரை கொடுத்து பாண் வாங்கலாம். மண்ணெண்ணெய் வண்டிக்காரர்களிடமும் இந்த முத்திரைகளைக் கொடுத்து மண்ணெண்ணெய் வாங்கலாம்.

முத்திரைகளை உரியகாலத்தில் பயன்படுத்த முடியாது போயின் அதனைச் சேமிப்புக் கணக்கிலிடலாம்.

மிகவும் கஷ்டப்பட்டவர்களுக்கும் பயன்படும்வகையிலேயே இத்திட்டம் கொண்டுவரப்படுகின்றது. (ம)

### 611 கலன் சாராயமே உற்பத்தி

[கொழும்பு]

கைதடி சாராய உற்பத்தித் தொழிற்சாலையில் வருடாந்தம் 611 கலன் தென்னம்பனஞ் சாராயத்தைத் தயாரிக்க முடிகிறது.

வட பகுதியில் கரும்பட்டிக்கு அதிக கிராக்கி இருப்பதால் சாராய உற்பத்திக்குப் போதிய கள்ளைப் பெறமுடியவில்லை. இதுவே கைதடித் தொழிற்சாலையில் அதிகளவு சாராயத்தை உற்பத்திசெய்ய முடியாமைக்குக் காரணமாகும்.

வடிசாலைகள் கூட்டுத்தாபனத் தலைவர் திரு ஏ. எஸ். பெரேரா மேற்கண்டவாறு கூறினார்.

சீதுவை தொழிற்சாலையில் வருடாந்தம் 4,05,566 கலன் சாராயமும் களுத்துறையில் 8,28,722 கலன் சாராயமும் உற்பத்திசெய்யப்படுகிறது என்றும் திரு. பெரேரா கூறினார். [ம-இ]

### அனைத்துல...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விவசாய போதனா பீடம் அமைக்கப்பட்டபின்னர் அங்கு போதனைசெய்யும் விரிவுரையாளர்களை இங்கு வரவழைத்து, இடையிடையே சிறப்புச் சொற்பொழிவு வழங்க ஏற்பாடு செய்யப்படும்" என்றும் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிகாரி திரு எஸ். சிவமுத்துலிங்கம் பேசுகையில் இலங்கையில் சகல இடங்களிலும், இளம் விவசாயகழகங்கள் அமைக்கப்பட்டு நல்ல முறையில் இயங்கிவருகின்றன. இன்று இங்கு திறக்கப்பட்டுள்ள இளம் விவசாயிகள் கழகத்தின், வளர்ச்சியில் என்னை அறியாமலே அதிக அக்கறை காட்ட வேண்டுமென என்மனம் தூண்டுகிறது. எனவே நானே முன்நின்று, இக்கழகத்தை வளர்க்க முயற்சிசெய்வேன் என்றும் தெரிவித்தார்.

விழாவில் லயன்ஸ் கழகப் பிரமுகர்களும், இலைப் பொறுப்பாளர் திரு. எஸ். ஆர். கனகநாயகமும் உரையாற்றினர். [செ]

## சரண்சிங் அமைச்சரவையில் மேலும் 9ஸ்டேட் மந்திரிகள்பதவிஏற்பு

### அனைவரும் காங்கிரசை சேர்ந்தவர்கள்

புதுடில்லி, ஆக. 4

இந்திய 'ஜனதா-எஸ்'-காங்கிரஸ் கூட்டரசின் 9 ஸ்டேட் அமைச்சர்கள் இன்று ஜனாதிபதி திரு சஞ்சீவரெட்டி முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

இவர்கள் ஒன்பதுபேருமே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் தமிழ் நாட்டைச் சேர்ந்த திரு கே கோபாலும் இவர்களுள் அடங்குவர்.

இவர்களுடன் சேர்ந்து இதுவரை 36 அமைச்சர்கள் பதவி ஏற்றனர். இவர்களுள் 19 பேர் "கபினட்" அந்தஸ்து அமைச்சர்கள், 17பேர் ஸ்டேட் அமைச்சர்கள்

இதேவேளையில் ஜனதா-எஸ் கட்சியைச் சேர்ந்த ஸ்டேட் அமைச்சர்களை நியமனம்செய்ய மேலும் சில நாட்கள் எடுக்கும் என்று சுகாதார அமைச்சர் திரு ரவிராய் தெரிவித்தார் [இ]

### குகசர்மாவுக்கு இன்று பாராட்டு

(யாழ்ப்பாணம்)

பௌராணிக வித்தகர் பிரம்மஸ்ரீ வ. குகசர்மாவின் 60 ஆண்டு பூர்த்தி விழாவும் 'ஞானத்தமிழ்' நூல் வெளியீடும் இன்று மாலை பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் தலைமையில் தெல்லிப்பழை துர்க்காதேவி அம்மன் ஆலய திருமுறைமண்டபத்தில் நடைபெறுகின்றது.

'ஞானத்தமிழ்' நூற் சிறப்புப் பிரதிகளை 'ஈழநாடு' நிர்வாக இயக்குநர் திரு.து சீனிவாசகம், திரு. தி. அருமைநாயகம், திரு. ஆர். கனகரத்தினம், திரு. இ. கனகசபை, திருமதி ஜெகதீஸ்வரி இராசேந்திரா ஆகியோர்பெற்றுக்கொள்வார்கள்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி திரு. அ சண்முகதாசும், ஆசிரியை திருமதி சண்முகதாசும் நூலை அறிமுகம்செய்துவைப்பார்கள் பொற்கிழி வழங்கலும் பாராட்டுரைகளும் இடம்பெறும். (ஈ)

### இந்திய பாராளுமன்றம் ஆக. 20ல் கூடும்

புதுடில்லி, ஆக 4

இந்திய பாராளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடர் இம்மாதம் 20ம் திகதி ஆரம்பமாகும் என புதிய பிரதமர் திரு சரண்சிங் தெரிவித்துள்ளார். [ரூ]

### தூத்துக்குடி தீ விபத்து

### இறந்தோர் தொகை108 ஆக அதிகரிப்பு

தூத்துக்குடி. ஆக 4

தூத்துக்குடி சினிமாக்கொட்டகை தீவிபத்துக்குப் பலியானோர் தொகை 108 ஆக அதிகரித்துள்ளது

கடந்த இரவு ஓருவர் மரணமானார்கள், எரிகாயங்களுடன் இன்னும் 73 பேர் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவருகின்றனர் என்றும் இவர்களில் 8 பேர் ஆபத்தான நிலையில் உள்ளனரென்றும் அறிவிக்கப்பட்டது [இ]

### கண்டியில் இன்று ஆரம்பமாகும்கலைவிழா

[கண்டி]

கண்டி புஷ்பதான மகளிர் வித்தியாலயத்தில் இன்றுநடைபெறும் கலைவிழாவில் அகில இலங்கை பாடசாலை நாடக, நடன, இசைப்போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவமாணவிகள் கலந்துகொள்கின்றனர்.

3 நாட்கள் நடைபெறும் இவ்விழாவில் 12 பாடசாலைகள் பங்குபற்றுகின்றன [இ]

### யாழ் மாவட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டத்தில் உள்ள பல அரசியல் சமூகத் தலைவர்களையும் சந்தித்து உரையாடியதுடன் பல பகுதிகளையும் நேரில் சென்று பார்வையிட்டனர், நாளை இவர்கள் கொழும்பு திரும்புவர் [கு-இ]


### நன்றி நவிலலும், அந்தியேட்டி அழைப்பும்

யாழ். பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். பி. குருசாமி அகால மரணமடைந்தபோது எமது துயரத்தில் சகலவிதத்திலும் பங்குகொண்டு மரணச்சடங்கில் நேரில் கலந்துகொண்டு அனுதாபச்செய்திகள், மலர்வளையங்கள் அனுப்பியுமெமக்கு ஆறுதல்கூறிய அனைவருக்குமெமது உளம் நிறைந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம். 12-8-79 ஞாயிறு காலை 6மணியளவில் கிரமலையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் 14-8-79 செவ்வாய் நண்பகல் நடைபெறும் வீட்டுக் கிரியையிலும் கலந்துகொள்ளுமாறும் உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி தையலம்பாள் குருசாமியும், குடும்பத்தினரும். 3245

### மரண அறிவித்தல்

திருமதி இராசம்மா இராசையா

நல்லூர் தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சபாபதி இராசையாவின் அன்பு மனைவி இராசம்மா காலமானார். இவர் இராசமணி இராசசுந்தரம், இராஜசிங்கம் [யாழ் நீதவான்], இரத்தினராசா [பிரதிப் பொது முகாமையாளர், அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனம்], அரசசிங்கம் [விவசாய உத்தியோகத்தர்], சுகுணவதி ஜெயராஜா ஆகியோரின் தாயாரும் காலஞ்சென்ற எம். இராசசுந்தரம், லூசி, சந்திரா, ராணி எஸ், வி. ஜெயராஜா [டாக்டர் சிங்கப்பூர்] ஆகியோரின் மாமியாருமாவார். பூதவுடல் நல்லடக்கத்திற்காக யாழ்ப்பாணம் கச்சேரி-நல்லூர் வீதியிலுள்ள 183-ம் இலக்க இல்லத்திலிருந்து இன்று [5-8-79] பிற்பகல் 4 மணிக்கு நல்லூர் புனித ஜேம்ஸ் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

8244



இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No: GB/8948/78
The Eelanadu P B No 49 Telegeram: Eelanadu. T.Phon: 389.